www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

04 DECEMBER 2022 - SUNDAY

Pages - 10

E Paper - # 018 / Y 01 / 2022

Web: WWW.NEWSPLUS.LK

E-mail: editor@newsplus.lk



## அன்வர் தலைமையில் மலேசியாவில் கூட்டாட்சி

மலேசியாவின் பிரதமர் அன்வர் இப்ராஹீம் தலைமையில் அந்த நாட்டில் கூட்டு அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. 02 »»»

## பைஸரின் நியமனத்தை எதிர்க்கிறார் திலங்க

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்டத்தின் தலைவராக சட்டத்தரணி பைஸர் முஸ்தபா நியமிக்கப்பட்டிருப்பதற்கு அக்கட்சியின் கொழும்பு 02 »»»

## உலமா கட்சிக்கு கிடைத்த அங்கீகாரம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தேர்தல் ஆணைக்குழு புதிதாக 7 அரசியல் கட்சிகளைப் பதிவு செய்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சி ஹேவா இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில், புதிதாக 02 »»»

# மாவட்ட இன விகிதாசாரப்படி தொழில், காணி, உயர் நியமனங்கள்...



### அரச ஆதரவு முஸ்லிம் எம்.பிக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

நாட்டின் சகல மாவட்டங்களிலும் கல்வி, தொழில்வாய்ப்புக்கள், காணிப் பகிர்வு அரச நியமனங்கள் என்பன அந்தந்த மாவட்டங்களின் இன விகிதாசார அடிப்படையில் வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைப்பதற்கு பாராளுமன்றத்தில் அரச தரப்பு முஸ்லிம் குழுவொன்று தீர்மானித்துள்ளது.

இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த சில தினங்களில் கூட்டவுள்ள உயர்மட்ட மாநாட்டுக்கு முஸ்லிம்கள் சார்பில் இக்கோரிக்கையை உள்ளடக்கிய மகஜரொன்றை கையளிக்கவிருப்பதாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அபிவிருத்திக் குழுத் தலைவருமான அலி சப்ரி ரஹீம் நியூஸ் பிளஸ்ஸுக்கு தெரிவித்தார்.

பாராளுமன்றம், மாகாண 02 »»»



## அடக்கத்திற்கு தடை விதித்தது சன்னவும், மெத்திகாவும்

### போட்டுடைத்தார் அலி சப்ரி

கடந்த காலத்தில் பரவிய கோவிட் தொற்று காரணமாக இறந்தவர்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது டாக்டர் சன்ன பெரேரா மற்றும் பேராசிரியர் மெத்திகா விதானகே ஆகியோரே என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், கொவிட் ஜனாஸாக்களை 02 »»»

## பிரித்தானிய சனத் தொகையில் 46.2 வீதமே கிறிஸ்தவர்கள்

### கருத்து கணிப்பில் தகவல்!

பிரித்தானியாவில் கிறிஸ்தவம் இப்போது சிறுபான்மை மதமாக மாறியிருக்கின்றது. 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி நடாத்தப்பட்ட குடிசன மதிப்பீட்டின் பின் இத் தவல்கள் 02 »»»

## இடைக்கால வகுப்புகளுக்கு மாணவர் சேர்ப்பது தடை

அரசாங்கப் பாடசாலைகளில் டிசம்பர் 05ஆம் திகதி மார்ச் முதல் 24 வரை இடைக்கால வகுப்புக்களுக்கு புதிதாக மாணவர்களை சேர்ப்பது கல்வியமைச்சினால் தடை செய்யப்பட்டுள்ளது. 02 »»»

## கொரோனாவுக்கு முன்பிருந்தது போல் பள்ளிகளில் ஜும்ஆ தொழுகை

### முஸ்லிம் திணைக்களம் தீர்மானம்!

ஜும்ஆப் பள்ளிவாசல்களில் மட்டுமே இனி ஜும்ஆத் தொழுகை

நாட்டிலுள்ள ஜும்ஆத் பள்ளிவாசல்களில் மாத்திரம் ஜும்ஆத் தொழுகை நடத்துவதற்கு அனுமதி வழங்குவதற்கு முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் தீர்மானித்துள்ளது.

வக்பு சபை, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா, தரீக்காக்களின் உச்ச பீடம், தேசிய சூரா கவுன்சில் மற்றும் ஷரீஆ கவுன்சில் ஆகியவற்றின் இணக்கத்துடன் 02 »»»

## அரசியலமைப்பு சபையில் கபீர் ஹாசீம், சித்தார்த்தன்



அரசியலமைப்பச் சபையின் எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதியாக ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் உள்ள சிறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி புளொட் அமைப்பின் 02 »»»

## தமிழ், சிங்கள மூலங்களில் திருமலையில் கல்வியியல் கல்லூரி

### இம்ரான் எம்.பி. பாராளுமன்றில் வேண்டுகோள்



திருகோணமலை மாவட்டம் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகக் காணப்படுவதற்கு முக்கிய காரணம் ஆசிரியர் பற்றாக்குறையாகும். எனவே, இதனை நிவர்த்திக்கும் பொருட்டு இம் மாவட்டத்தில் தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலங்களைக் கொண்ட கல்வியியல் கல்லூரி தாபிக்கப்பட 02 »»»

## ஐ.ம. சக்தியின் மாநாடு கொழும்பில்

ஐக்கிய மக்கள் சக்தியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பொரளை கம்பெல் மைதானத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெறுமென கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

## ஐக்கிய மக்கள் சக்திக்கே தேர்தல்களில் வெற்றி வாய்ப்பு



### கசிந்தது பஸிலின் கருத்துக் கணிப்பு!

எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தி 51 சதவீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெறுமென மொட்டுக் கட்சியினர் நடத்திய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

மொட்டுக் கட்சியின் முக்கியஸ்தரான பஷில் ராஜபக்ஷவின் கோரிக்கை படி நடாத்தப்பட்ட இந்த ஆய்வில் எதிர்வரும் தேர்தலில் 2ஆவது இடத்தை மக்கள் 02 »»»

## மாவட்ட...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

சபைகள் மற்றும் உள்ள10ராட்சி மன்றங்களில் அந்தந்த மாவட்ட இன விகிதாசாரம் பேணப்படுவதை வலியுறுத்தி இப்பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அலி சப்ரி ரஹீம் தெரிவித்தார்.

இத்துறைகளில் சமத்துவம் பேணப்படாமை காரணமாக சமூகங்களில் அதிருப்தி நிலவுவதாக தெரிவித்தார். நாட்டின் 24 மாவட்டங்களில் ஒருவர் கூட முஸ்லிம் அரசாங்க அதிபராக நியமிக்கப்படாமை, 168 நாடுகளின் வெளிநாட்டுத் தூதுவர்களில் ஐந்து பேருக்குக் குறைந்தோரே முஸ்லிம்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை என்பதனை சுட்டிக்காட்டிய அலி சப்ரி, சகல மாவட்டங்களிலும் அரச நியமனங்கள், அரச வளங்கள் பகிரப்படுவது அந்தந்த மாவட்டத்தின் இன விகிதாசாரத்தை பேணி மேற்கொள்ளப்படுவதின் அவசியத்தையும் இந்த அறிக்கையில் உள்ளடக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பாராளுமன்றத்தில் அரசுக்கு ஆதரிக்கும் உறுப்பினர்களது ஆதரவு கிடைத்துள்ளதாவும், ஏனையவர்களது ஆதரவை பெறுவது பற்றி பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.


NEWS PLUS இல்,

சிறு விளம்பரங்களை பிரசுரிக்க நாங்கள் தயாராக உள்ளோம்....

உங்கள் வியாபுரத்தினை வியாபிக்க...

உங்களது விற்பனைப் பொருட்களை சந்தைப்படுத்த...

அல்லது

நீங்கள் ஏதாவதொரு பொருளை விற்க வேண்டுமா?



Newsplus மின்னிதழில் உங்கள் தரமான விளம்பரங்களை குறைந்த விலையில் இலகுவாக பிரசுரியுங்கள்.....



ரூபா. 200 முதல் விளம்பரங்களை பிரசுரிக்க முடியும்

Collaborate with Publish Partner...

SIYANE NEWS

விற்பனை அடையாளங்களை பிரபல்யப்படுத்துங்கள்

தொடர்புகளுக்கு: பயனை இன்றே அனுபவியுங்கள்...

- Rikas - 076 70 23 241
- Sanuskanth - 076 260 0343
- Rihmy Hakeem - 072 060 3053
- Thivagaran - 77 464 6663
- Nawfees - 75 510 3901



**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடையோர் 075 40 10 238 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

NEWS PLUS


## தமிழ்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

வேண்டும். இதன் மூலம் அதிகம் சிங்கள மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறையுள்ள மொரவெள, கோமரங்கடவெல, பதவிசிறிபுர போன்ற பகுதிப் பாடசாலைகளும் பெரும் நன்மையடையும் என சுகாதார அமைச்சு சம்பந்தமான குழுநிலை விவாதத்தில் பாராளுமன்றில் உரையாற்றும் போது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

திருகோணமலை கல்வியில் கல்லூரிக்காக திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் சர்தாபுர பகுதியில் 15 ஏக்கர் காணியை வழங்க ஒப்புதல் அளித்துள்ளார். எனவே, திருகோணமலை கல்வியியல் கல்லூரியை தாபிக்க கௌரவ அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்,

அடுத்த மாதம் முதல் புதிய கல்வித் திட்டத்தின் நிர்வாக விடயங்கள் அமுலாகின்றன. இதில் வலயக் கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கையை 120 ஆக அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே, இதனைக் கருத்தில் கொண்டு திருகோணமலை மாவட்டத்தில் முள்ளிப்பொத்தானை, குச்சவெளி ஆகிய இரு புதிய கல்வி வலயங்கள் தாபிக்கப்பட வேண்டும் என அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.

தற்போது தம்பலகமம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள முஸ்லிம் பாடசாலைகள் கிண்ணியா கல்வி வலயத்திலும், தமிழ்ப் பாடசாலைகள் திருகோணமலை வலயத்திலும், சிங்களப் பாடசாலைகள் கந்தளாய் வலயத்திலும் இணைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடசாலைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து முள்ளிப்பொத்தானை கல்வி வலயம் உருவாக்கப்பட வேண்டும் என்று முன்மொழிகின்றேன். இந்த வலயத்தின் கீழ் 16 முஸ்லிம் பாடசாலைகளும், 8 தமிழ்ப் பாடசாலைகளும், 6 சிங்களப் பாடசாலைகளுமாக மொத்தம் 30 பாடசாலைகள் உள்ளடங்கும்.

அதேபோல திருகோணமலை வலயத்தின் கீழ் வரும் குச்சவெளி பிரதேச பாடசாலைகள் பல்வேறு வழிகளிலும் பின் தங்கிக் காணப்படுகின்றன. திருகோணமலை வலயத்திலிருந்து சுமார் 50 கிலோமீற்றருக்கும் அப்பால் தூரத்திலுள்ள இப்பாடசாலைகளின் முன்னேற்றம் கருதி புதிய குச்சவெளி கல்வி வலயம் தாபிக்கப்பட வேண்டும் எனவும், இந்த வலயத்தின் கீழ் 15 முஸ்லிம் பாடசாலைகளும், 13 தமிழ்ப் பாடசாலைகளும், 4 சிங்களப் பாடசாலைகளுமாக மொத்தம் 32 பாடசாலைகள் உள்ளடங்கும் எனவும் தெரிவித்தார்.

மேலும் அவரது உரையில் இம்மாதம் 31 ஆம் திகதியுடன் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் ஓய்வு பெறுகின்றனர். எனவே, இந்தப் பதவிகளுக்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் புதிய அதிகாரிகளை நியமிக்க கௌரவ அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவரது உரையில் கேட்டுக்கொண்டார்.

## அன்வர்..

(முன்பக்கத் தொடர்ச்சி..)

ஒற்றுமை அரசாங்கம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசில் நிதியமைச்சராகவும், பிரதமர் அன்வர் இப்ராஹீம் பதவியேற்றுள்ளார்.

தேசிய முன்னணி மற்றும் ஐ.பி.எல். கட்சியுடன் இணைந்தே ஒற்றுமை அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. பிரதிப் பிரதமர்களாக அஹமட் ஸஹீதும், திருமதி பஸீலா யூசுப்பும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் இருவரது கட்சியும் இணைந்தே புதிய அரசாங்கத்தை அமைத்துள்ளார்கள். கடந்த பொதுத் தேர்தலில் அன்வர் இப்ராஹீமுக்கு அரிதிப் பெரும்பான்மை கிடைக்காதையடுத்து கூட்டு அரசாங்கமொன்றை உருவாக்கவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது.

28 பேரைக் கொண்ட அமைச்சரவையில் 4 பேர் செனட் சபை மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ் அமைச்சரவையில் இந்திய வம்சாவளி தமிழர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்ட காலமாக பிரதமர் பதவியேற்க எதிர்பார்த்திருந்த அன்வர் இப்றாஹீமுக்கு இம்முறையே பிரதமர் பதவி கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலமா...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

ஏழு அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளித்திருப்பதாகத் தெரிவித்தார்.

இவ்வளவு காலமாக உலமாக் கட்சியாகச் செயற்பட்ட ஐக்கிய காங்கிரஸ் கட்சி புதிதாக பதிவு செய்யப்பட்டதொரு கட்சியாகும்.

ஜேவிபியின் ஸ்தாபகத் தலைவர் ரோஹன விஜேவீரவின் மகன் உயிந்து விஜேவீரவின் பெயரில் இரண்டாவது தலைமுறை என்ற புதிய அரசியல் கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசனின் தலைமையில் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் என்ற கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டு இயங்கும் ஈரோஸ் ஜனநாயக முன்னணி என்றதொரு கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சமூக ஜனநாயகக் கட்சி என்ற பெயரில் பொதுஜன பெரமுனவின் பியத்மக என்ற பிரிவினரை உள்ளடக்கிய கட்சியும் பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் சன்ன இக்கட்சியின் முக்கியஸ்தராக இருக்கின்றார்.

மக்கள் அறிவுசார் முன்னணி என்ற பெயரிலே இந்த பியத்மக குழு செயற்பட்டு வருகிறது.

## இடைக்கால..

(முன்பக்கத் தொடர்ச்சி..)

புதிதாக மாணவர்களை இணைத்துக் கொள்வது 2022 ஆண்டு கல்வியாண்டு முடிந்த பின்னரே மேற்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டின் கல்வியாண்டு 2023 மார்ச் 24 உடன் நிறைவு பெறுகிறது. அதேநேரம் கொவிட் காலங்களில் வேறு பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட க.பொ.த. உயர்தரப் பாடசாலை மாணவர்கள் புதிதாக பாடசாலைகளில் சேர்வதற்கு தமது விண்ணப்பப் படிவங்களை தற்போதுள்ள பாடசாலைகளுக்கே சமர்ப்பிக்கவேண்டுமென கேட்கப்பட்டுள்ளது. கல்வியமைச்சுக்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டாமென கல்வியமைச்சு கேட்டுள்ளது.

## பிரித்தானியா..

(முன்பக்கத் தொடர்ச்சி..)

வெளியாகியுள்ளன.

பிரித்தானியா சனத்தொகையில் 46.2 சதவீதத்தினர் தாம் கிறிஸ்தவர் என அடையாளம் காட்டியுள்ளனர். கிறிஸ்தவர்களாக தம்மை காட்டும் சனத்தொகை 5.5 மில்லியனினால் குறைந்திருப்பதாக இந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏனைய சகல மதங்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியாவில் வாழும் 85 இலட்சம் மக்கள் தமக்கு எந்த மதமும் இல்லையென தெரிவித்துள்ளனர்.

அநேகமான உள்ளூராட்சி மன்ற பிரதேச மக்களும் தாம் எந்த மதத்தையும் சார்ந்தவர்கள் அல்லர் எனப் பதிவு செய்திருப்பதாக இந்த குடிசன மதிப்பீட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இரு குடிசன மதிப்பீட்டு கணிப்பீட்டின் படி அனேகமான பிரதேசங்களில் பௌத்தம், இந்து, முஸ்லிம், இஸ்லாம், யூதர்கள், சீக்ரர்களுடைய நம்பிக்கை எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரித்தானியாவில் இருக்கின்ற அனேக பிரதான நகரங்களில் பல்வேறு இனத்தவர்களும் வாழ்கின்ற புள்ளிவிபரங்களே வெளியிடப்பட்டிருக்கின்றன.

## அடக்கத்திற்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

அடக்கம் செய்வது தொடர்பாக அமைச்சர்கள் எவரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும், உலக சுகாதார ஸ்தாபனம் கோவிட் தொற்றினால் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு இடமளிப்பதாயின், ஏனைய நாடுகளில் அவ்வாறு செய்யாதமலிருப்பது நாம் எம்மை ஒரு பிலேச்ச நாடாக உலகுக்கு தென்படும் என்ற கருத்து இருந்தது. கொவிட் பூதவுடல்களை அடக்கம் செய்தால் அதனுள் உள்ள வைரஸ் பல கோடி வருடங்களின் பின்னும் மண்ணை உடைத்துக்கொண்டு வெளிவருமென்று ஊடகங்களுக்கு தெரிவித்தது மெத்திகா விதானகே எனத் தெரிவித்த அமைச்சர், ஆனால் 11ஆம் ஆண்டு பாடப் புத்தகத்தைப் பார்த்தால் வைரஸ் ஒன்று 24 மணி நேரத்திற்கு மாத்திரமே உயிருள்ள ஒரு கிருமியாக இருக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

## பைஸரின்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

மாவட்ட தலைமை பதவி வகித்த திலங்க சுமதி பால எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவிக்கு திலங்க சுமதிபாலவை நியமித்தமை சமப்படுத்துவதற்காக கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன பைஸர் முஸ்தபாவை கொழும்பு மாவட்ட தலைவராக நியமித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவி வகித்த மஹிந்த அமரவீரவை பதவியிலிருந்து நீக்கி திலங்க சுமதிபால நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஐக்கிய...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

விடுதலை முன்னணி பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவுக்கு 37 சதவீதமான வாக்குகள் கிடைக்குமென்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து தாயகம் திரும்பிய பஷில் ராஜபக்ஷ இந்த அறிக்கையைப் பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

## கொரோனாவுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கொவிட் தொற்று நோய்க்கு முன்னைய காலத்தில் ஜும்ஆத் தொழுகை இடம்பெற்ற பள்ளிவாசல்களில் மட்டும் ஜும்ஆத் தொழுகை நடாத்த முடிவு செய்துள்ளது.

கொரோனா தொற்று காரணமாக பொதுமக்கள் ஒன்றுகூடுவது தொடர்பாக சுகாதார அமைச்சு விடுத்திருந்த கட்டுப்பாடுகள் காரணமாக நாட்டின் அனைத்துப் பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், சாவியாக்கள் என்பவற்றில் தற்காலிகமாக ஜும்ஆத் தொழுகை நடத்துவதற்கு முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் அனுமதியளித்திருந்தது.

தற்போது கொரோனா தொற்று முழுமையாக நீங்கியுள்ளமை காரணமாக ஜும்ஆப் பள்ளிவாசல்களில் மட்டும் ஜும்ஆத் தொழுகை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே ஜும்ஆப் பள்ளிவாசல்களில் மட்டும் ஜும்ஆத் தொழுகையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் இப்ராஹீம் அன்சார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேநேரம் இரு வாரங்களுக்கு முன்னர் இது தொடர்பாக எடுத்த தீர்மானத்தை அமுல்நடத்த தாமதமாக்கியது குறித்து கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசலின் பிரதம நம்பிக்கையாளர் ரியாஸ்ஸாலி, சமய மற்றும் கலாச்சார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

## அரசியலமைப்பு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமரின் பிரதிநிதியாக பொதுஜன பெரமுனவின் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார். பத்துப் பேரைக் கொண்ட இந்த சபையில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் சார்பில் மூவரும் இடம்பெறுவர்.

எதிர்க் காலத்தில் அரசின் முக்கியமான நியமனங்கள் இந்தப் பேரவையினாலேயே மேற்கொள்ளப்படவுள்ளது.

# 75ஆவது சுதந்திர தின விழாவில் ஒரு தாய் மக்களாக அனைவரும் ஒன்றுபட சட்டத்தரணிகளது பங்களிப்பு இன்றியமையாதது

## – ஜனாதிபதி தெரிவிப்பு

இன, மத மற்றும் மக்களின் கவலைகளை கடந்த காலத்தை நோக்கி பின்தள்ளி போடுவதன் மூலம் 75ஆவது சுதந்திர தினத்தின்போதாவது நாடடின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை சீர்குலைக்கும் முயற்சிகளை தவிர்த்துக் கொள்ள முடியுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தெரிவித்தார்.

ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களிடையே கலந்துரையாடப்பட்டது போல நாட்டிலுள்ள சட்டத்தரணிகள் பங்களிப்புச் செய்தால் இந்த இலக்கை அடைய முடியுமென்றும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

மேலும், இது எளிதான விடயம் அல்லாத போதும் சாதிக்க முடியாத விடயம் என்பதற்கில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அரசியல்வாதிகளால் மட்டும் இதனை சாதிக்க முடியாது என்றும் இதற்கு சட்டத்தரணிகளின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ரணில் விக்ரமசிங்க அவர்கள் சட்டத்தரணியாகி 50 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் சட்டத்தரணிகள் சங்கத்தினால் நேற்று (03) இரவு ஷெங்கிரிலா ஹோட்டலிலுள்ள லோட்டஸ் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த ஜனாதிபதிக்கான கௌரவிப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஒட்டுமொத்த அமைப்பு முறையும் இளைய தலைமுறையினரால் கேள்விக்குட்படுத்தப்படும்போது நாம் அனைவரும் சவாலுக்கு உள்ளாக நேரிடுகிறது. இது பொருளாதார சவாலிலும் பார்க்க பாரதுரமானது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த கால காயங்களை ஆற்றுவதா அல்லது அதனை மேலும் வளரவிடுவதா என தீர்மானிப்பதற்கான சந்தர்ப்பம் தற்போது நாட்டுக்கு கிடைத்துள்ளது.

நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை சீர்குலைக்காமல் இன, மத வேறுபாடு மற்றும் மக்களின் சில யதார்த்தமான கவலைகளால் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது தொடர்பில் ஆராய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள அனைத்து சட்டத்தரணிகளும் ஒன்று சேர்ந்தால் அனைத்து பாரிய பிரச்சினைகளையும் பின்தள்ளிவிட்டு 75ஆவது சுதந்திர தின நிகழ்வின்போது நாம் அனைவரும் ஒரு தாய் மக்களாக முடியுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இது தத்தமது கருத்துக்களுக்கு வரவேற்பளிப்பதற்கும் மக்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தை உள்ளடக்கிய அரசியலமைப்பொன்றை தயாரிப்பதற்கும் அதேவேளை அரசியலமைப்புக்குட்பட்ட அரசாங்கமொன்றை முன்னெடுத்துச் செல்வதற்கும் வழிவகுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கும் முதற் பெண்மணி தலைமை பேராசிரியர் மைத்ரி விக்ரமசிங்கவுக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேராவினால் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பன, ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா ஆகியோரும் உரையாற்றினர்.

ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா வரவேற்புரையையும் சட்டத்தரணி குஷான் டி அல்விஸ் நன்றியுரையையும் ஆற்றினர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய, சட்டம், சிறைச்சாலைகள் விவகார மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபஷ, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, முன்னாள் எதிர்கட்சித் தலைவரும் மூத்த பாராளுமன்ற உறுப்பினருமான ஆர்.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்சன யாப்பா, சந்திம வீரக்கொடி, உதய கம்மன்பில, எம்.ஏ.சுமந்திரன், லக்ஷ்மன் கிரியெல்ல, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, ஜனாதிபதியின் ஆலோசகர் அகில விராஜ் காரியவசம், ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி. ஆர். எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் ஆலோசகர் கே.பி.தயாரத்ன, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன, ஐ.தே.க பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, நவீன் திஸாநாயக்க, ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளர் சென்ட்ரா பெரேரா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.









# அரங்கம்

பாராளுமன்றத்தில் தொடராக இடம்பெற்று வருகின்ற வரவு-செலவு திட்ட விவாதம் எதிர்வரும் வியாழக் கிழமையுடன் முடிவுற்றது. மூன்று வாரங்களாக நடைபெறும் விவாதம் உப்புச் சப்பில்லாத நிலையிலிருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அரச எதிர்த்தரப்பு மோதல்களை காணக்கூடியதாக இருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறைந்த அலுவல்களுக்கு மத்தியில் பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்து திடீர் திடீரென பதிலளிப்பதும் பலத்த விமர்சனங்களுக்குள்ளாகியிருக்கின்றது.

ஜனாதிபதியின் உரைகளும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டுமென்று ஐ.ம.சக்தியினர் சபாநாயகரை கேட்டுள்ளனர். வியாழக்கிழமை மலேசியாவின் புதிய பிரதமர் அன்வர் இப்ராஹீமுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்ததோடு, இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளைய மேம்படுத்துவது பற்றியும் உரையாடினார்.

## செம்மஞ்சல் சாரியில் வந்த பெண் எம்.பிக்கள் ஜனாதிபதிக்கு செம்மஞ்சல் நிற வலயல் அணிவிப்பு

மலேசியாவின் 10ஆவது பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அன்வர் இப்ராஹீம், இலங்கையோடு மிக நெருங்கிய தொடர்புடைய ஒரு தலைவராவார். குறிப்பாக இலங்கையிலுள்ள முஸ்லிம் இளைஞர் இயக்கங்களுடன் நீண்ட காலமாக நெருங்கிய தொடர்பை பேணி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், அன்வர் இப்ராஹீமும் தனது நீண்ட கால நட்புறவு பற்றி உரையாடியுள்ளனர். ஜனாதிபதியின் நெருங்கிய நண்பரான நர்ளின் பெர்னாண்டோவிற்கு இறுதி மரியாதை செலுத்திவிட்டு ஜனாதிபதி நேரடியாக பாராளுமன்றத்துக்கு வந்தார். பாராளுமன்றத்தில் பெண் உறுப்பினர்களது கூட்டணி செம்மஞ்சல் நிற வலையல்களை அணிந்திருந்தனர். ஜனாதிபதி தனது ஆலோசகர் பேராசிரியர் ஆ.சு.மாரசிங்கவடன் பெண் உறுப்பினர்கள் ஏற்பாடு செய்த நிகழ்வில் கலந்து கொள்ள சென்றார்.

சேர் இன்று காலையிலே ஒரு சுப காரியம் நடக்கிவிருக்கிறது என்று ஆ.சு.மாரசிங்க கூறும் போது வந்திருந்த எல்லோரும் செம்மஞ்சல் நிறத்தில் பிரகாசமடைந்திருக்கிறார்கள் என்று ஜனாதிபதி கூறிய போது எல்லோரும் வாய்பிட்டு சிறித்தார்கள்.

பெண்கள் விவகார அமைச்சு ஜனாதிபதியின் பொறுப்பில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த அமைச்சு உங்கள் கீழே இருக்க வேண்டுனெ வைத்திய நிபுணர் சுதர்ஷினி சொல்லும் போது அங்கே இருந்த ஏனைய பெண் உறுப்பினர்களும் ஏகமனமாக அதனை வரவேற்றனர். ஜனாதிபதிபதி அந்த இடத்துக்கு வந்த போது டாக்டர் சுதர்ஷ ினி பெர்னான்டோ புள்ளே ஜனாதிபதிக்கு செம்மஞ்சல் நிற வலயலை அணிவித்தார். அமைச்சர் டாக்டர் சீதா அரங்கே பல பெண்கள் மற்றும் சிறுவர்கள் நலன்புரிக்காக தயாரித்திருந்த விஷேட அறிக்கையை ஜனாதிபதிக்கு கையளித்தார்.

பெண்களுக்கு தொந்தரவு செய்வதனை ஒழிப்பது தொடர்பாக இடம்பெற்ற சர்வதேச மகாநாட்டுக்கு சமாந்தரமாக பாராளுமன்றத்தில் பெண் உறுப்பினர்கள் ஏற்பாடு செய்த செம்மஞ்சல் நிற வயல்களை அனுவிப்பது பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வுக்கு பாராளுமன்றத்தில் உள்ள சகல பெண் உறுப்பினர்களும் செம்மஞ்சல் நிற சாரி அணிந்து வந்திருந்தனர்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தில் போதியளவு பெண்கள் பிரதிநிதித்தவம் இல்லாதது பற்றி சுட்டிகன்காட்டி பேசினார். கட்சி பேதமின்றி இதனை அனைவரும் வரவேற்றனர்.

### சஜித்தின் மனைவி பற்றி பேசிய எம்.பிக்கள்

வெளிநாட்டில் உயர் கல்வி பெறுவதற்கு செல்லும் இலங்கையர்கள் 3 பில்லியனுக்கும் மேற்பட்ட பணத்தை அதற்காக செலவு செய்கிறார்கள். இதனை விரைவில் நிறுத்த வேண்டுமென்று ஜனாதிபதி தெரிவித்தார். கட்சி பேதமின்றி எம்.பிக்கள் ஜனாதிபதியின் இந்த பிரேரணையை வரவேற்றனர். நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து இதனை செயற்படுத்துவோம் என ஜனாதிபதி தெரிவித்தார்.

பாராளுமனற்த்தில் இந்நாட்களில் ஆளும் கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் மனைவியைப் பற்றியே பேசுகிறார்கள். நாட்டின் பிரச்சினைகளை விட்டுவிட்டு முப்பதுக்கும் மேற்பட்ட எம். பிக்கள் இவ்வாறு பேசியிருக்கிறார்கள்.

குழுநிலை விவாதம் இருப்பது எதிர்க்கட்சிகளுக்கு. எதிர்க்கட்சிகளுக்கு தான் கூடுதலான நேரம் ஒதுக்கப்படுகின்றது. தலைவரின் மனைவி பற்றி பேசுவதற்கு அல்ல. மக்களது பிரச்சினைகளை மறந்து எதிர்க்கட்சி தலைவரின் மனைவி பற்றி பேசுகிறார்கள் என டயானா கமகே தெரிவித்தார். நாட்டிலே மருந்துப் பிரச்சினை இருக்கின்றது. மறுபுறத்தில் கோவிட் பரவுகின்றது. எல்லாவற்றையும் விட்டுவிட்டு எதிர்க்கட்சித் தலைவரின் மனைவியைப் பற்றி பேசுகிறார்கள் என பேராசிரியர் அசூ மாரசிங்க தெரிவித்தார். இதுபற்றியெல்லாம் சிரித்த முகத்தோடு கேட்டுக் கொண்டிருந்த ஜனாதிபதி பதிலேதும் தெரிவிக்கவில்லை.

### எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டுக்களை மறுக்கிறார் ஜனாதிபதி

ஜனாதிபதி செவ்வாயன்று பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருந்தது எதிர்க்கட்சித் தலைவர் தம்மீது சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்ளுக்கு பதிலளிப்பதற்காகும். பரபால சூத்திரம் தொடர்பாக சஜித் தெரிவித்த விடயத்துக்கு பதிலளித்திருந்த ஜனாதிபதி, பரபாவ சூத்திரம் என்பது விஷேடமாக தர்மம் பற்றிய ஒன்றாகும். அதிலே மகாசங்கத்தினர் பற்றி குறிப்பிடப்படவில்லை என்று திலளித்தார். அதேநேரம் மாலை பாதுகாப்புத் துறை அரதிகாரிகளைச் சந்தித்த ஜனாதிபதி போதைவஸ்து ஒழிப்பு தொடர்பாக முக்கிய பல தீர்மானங்களை எடுத்தார். திங்களன்று ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்தபோது ஐ.தே.க. செயற்பாட்டாளர்களுடன் கூட்டமொன்றை ஏற்பாடு செய்தார். கட்சியை மறுசீரமைப்பது தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டது. புதிதாக கட்சிக்கு தொகுதி அமைப்பாளர்களை தெரிவு செய்வது பற்றி ஆராயப்பட்டது. கட்சியின் செயலாளர் ரங்கே பண்டார ஜனவரி முதலாம் திகதி நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளதாக தெரிவித்தார்.

புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இருந்த ஜனாதிபதி எகிப்தில் நடைபெற்ற காலநிலை தொடர்பான மாநாட்டின் பின்னரான ஏற்பட்ட நிலை குறித்து விமர்சித்தார். இந்த கருத்தை வெளியிட முன்னர் சுற்றாடல் ஆலோசகர் ருவன் விஜேவர்தனவுடன் அது பற்றி கலந்தாலோசித்தார்.

### நாட்டின் விருப்பத்திற்குரியவராக மத்திய வங்கி ஆளுனர்

மத்திய வங்கி ஆளுனர் கலாநிதி நந்தலால் வீரசிங்க கடந்த சில தினங்களாக நாட்டில் பிரபலமாக பேசப்படும் ஒருவராக மாறியுள்ளார். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நடாத்திய ஆய்வொன்றில் இலங்கையில் மிக பிரபல்யமானவராக கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவாகியுள்ளார். நாட்டில் இவருக்கு 56.6 வீத நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாக இந்த ஆய்வில் வெளிவந்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரண்டாவது இடத்தையும், பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா மூன்றாமிடத்தையும், கோப் குழுத் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மத்தும பண்டார நான்காவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க மீது 44.5 சதவீதமானோர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். முதலிடம் பெற்ற மத்திய வங்கி ஆளுநர் மீது 56.6 வீதமானோர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இதேநேரம் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராக செயற்படும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அசு மாரசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மத்திய வங்கி ஆளுநர் பொது வேட்பாளராக போட்டியிட தயாராகவதாக தெரிவித்தார். தனியார் ஊடகமொன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் தெரிவித்த கருத்து பலத்த விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. ரணில் விக்கிரமசிங்க இக்கூற்றுக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென தெரிவித்துள்ளார். அதேநேரம் பேராசிரியர் மாரசிங்க தான் தெரிவித்தது தவறு என மன்னிப்புக் கேட்டுள்ளார். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பொது அபேட்சகர் ஒருவரை நிறுத்த வேண்டுமென்ற மேலோங்கல் நிலவியுள்ள நிலையிலேயே அசு மாரசிங்க இந்த கருத்தை வெளியிட்டிருந்தார். இப்போது அவர் இதனை மறுத்துள்ளார்.

அதள பாதாளத்திலிருந்து நாட்டை ஓரளவு நிலைக்காவது தொண்டு வந்தவர் மத்திய வங்கி ஆளுநர் என்ற நம்பிக்கை நாட்டில் மேலோங்கியுள்ள நிலையிலேயே நந்த லால் வீரசிங்க மிக பிரபல்யமானவராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இதேநேரம் இலங்கையின் வங்குரோத்து நிலை பற்றி கருத்து தெரிவித்துள்ள ரிச் ரேட்டிங் நிறுவனம், இலங்கை வர்க்கப்படுத்தலில் மிகவும் கீழ் நிலைக்குச் சென்றிருப்பதாக குறிப்பிட்டுள்ளார். உள்நாட்டு - வெளிநாட்டு கடன்களை செலுத்துவதில் இலங்கை இதுவரை CCC அணியிலேயே இருந்தது. இப்போது அது ஊஊஊ நிலைக்கு குறைந்துள்ளது. இலங்கியன் உயர் வட்டி விகிதாசாரம் மற்றும் கடினமான உள்நாட்டு நிலை கொள்கை காரணமதாக உள்நாட்டு கடன் செலுத்துவது கைவிடும் ஆபத்தில் இருப்பதாகவம் ரேட்டிங் அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது. .

அண்மையில் வெளியான க.பொ.த. சதாரண தரப் பரீட்சையில் 6000 மாணவர்கள் ஒரு பாடத்திலும் சித்தியடைந்திருக்கவில்லை. இவர்கள் அனைவரம் ஒரு பாடத்திலேனும் சித்தியடையாமைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. கொரோனா நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக பாடசாலைகளால் சீராக இயங்க முடியாமல் போனமையே பிரதான காரணமாக இருக்கலாமென குறிப்பிடப்படுகிறது. சுமார் 6000 பேர் பரீட்சையில் தோல்வியடைந்திருப்பது குறித்து வியாழனன்று இடம்பெற்ற கல்வியமைச்சின் குழுநிலை விவாதத்தின் போது ஆராயப்பட்டது. கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்த 6000 பேருக்கும் ஏற்பட்ட இந்த கதி தொடர்பாக பொறுப்பேற்க யாருமில்லை என்பதை பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

### வடக்கில் கெடுபிடிகளின்றி முடிவடைந்த பிரபாகரனின் பிறந்த தினம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 68 ஆவது பிறந்த தினம் கடந்த 27ஆம் திகதி இடம்பெற்றது. இதனையிட்டு வடக்கில் மாவீரர் தினமும், பிரபாகரினி பிறந்த தின நிகழ்வும் இவ்வாரத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் சங்கர் இறந்ததை நினைவு கூர்ந்து ஒவ்வொரு வருடமும் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும் முன்னைய வருடங்களைப் போலன்றி இம்முறை பல இடங்களிலும் படையினர் மற்றும் பொலிஸாரின் நெருக்கடிகள் இல்லாது மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்பு தமிழ் தரப்பு குறித்து கடைப்பிடிக்கப்படும் மென்மைப் போக்கின் ஓரங்கமாகவே இது இருக்கலாமென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றன.

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்னால் ஒரு யாசகர் அங்கு வருகை தந்த சகலருக்கும் பிரபாகரனின் நினைவாக இனிப்புப் பண்டங்களை வழங்கியமை எல்லோராலும் பேசப்படும் விடயமாக மாறியுள்ளது.

### இலங்கைக்கு வந்த ரம்போசாவின் பதவி பறிபோகுமா?

அண்மையில் இந்தோனேஷியாவில் நடைபெற்ற உயர்மட்ட மகாநாடொன்றில் கலந்து கொண்டு தாயகம் திரும்பும் வழியில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிறிது நேரம் தரித்துச் சென்ற தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரம்போசாவின் பதவி பறிபோகும் நிலையில் உள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய ஜனாதிபதி ரம்போசாவின் 70ஆவது பிறந்த தினத்தையொட்டி விமான நிலையத்தில் ஜனாதிபதி ரணில் தலைமையில் கேக் வெட்டப்பட்டு பிறந்த தினம் கொண்டாடப்பட்டது. அதே ரம்போசா இப்போது தமது நாட்டில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளார்.

ஜனாதிபதி ரம்போசா பதுக்கி வைத்திருந்த பெருந்தொகையான டொலர்கள் கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து அது பற்றி ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கை படி ரம்போசா குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். அவருக்கெதிராக பாராளுமன்றத்தில் குற்றப்பிரேரணை கொண்டு வர எதிர்க்கட்சிகள் தயாராகி வருகின்றன. இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டால், ரம்போசாவின் பதவி பறிபோகலாம் என தென்னாபிரிக்க செய்திகள் தெரிவிக்கின்றன.

### பாத்திமாவுக்கு சஜித் வழங்கிய பஸ் வண்டி

கொழும்பு பாத்திமா முஸ்லிம் கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பஸ்ஸொன்றை அன்பளிப்புச் செய்துள்ளார். சஜித் பிரேமதாஸ பாடசாலை மாணவர்களுக்காக வழங்கும் 41ஆவது பஸ் இதுவாகும். பாடசாலைக்குள் பஸ்ஸை எடுத்துச் சென்று தானே செலுத்திய எதிர்க்கட்சித் தலைவர், மாணவிகளுக்கு பெறுமதியான சொற்பொலிவொன்றையும் நிகழ்த்தினார். சுமார் 50 இலட்சம் பெறுமதியான இந்த பஸ் வண்டியை கையளிக்கும் இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், எம். எம். மரிக்கார் உட்பட பல முக்கியஸ்தர்ளும், பெருமளவிலான பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

கல்லூரி அதிபர் திருமதி சிஹானாவிடம் பஸ்ஸூக்கான ஆவணங்களை எதிர்க்கட்சித் தலைவர் கையளித்தார். கொழும்பு மாவட்ட முஸ்லிம் மாணவிகளின் முக்கிய கல்லூரிகளில் ஒன்றான பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வளர்ச்சிக்கு இந்த பஸ் வண்டி பெரும் உதவியாக அமையுமென்று குலுமியிருந்த பெற்றோர் தெரிவித்ததோடு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான் மற்றும் மரிக்கார் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தனர்.

### 24 மணிநேரமும் மதுபான கடைகள் திறக்கப்படவேண்டும் டயானா கோரிக்கை

நாட்டில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் மதுபான கடைகள், ஹோர்டல்கள், கடைகள் 24 மணி நேரமும் திறந்து வைக்கப்படவேண்டுமென சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் திருமதி டயானா கமகே கூறுகிறார்.

இரவு 10 மணிக்குப் பின் இவைகள் மூடப்பட்டிருந்தால் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பணத்தை செலவு செய்வது எப்படியென்று அவர் கேள்வி எழுப்பினார். சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் சுற்றுலாத்துறை மூலம் உச்ச வறுமானத்தை அடைய வேண்டுமானால் 24 மணிநேரமும் மதுபான கடைகள் திறந்து வைத்திருக்க வேண்டுமென தெரிவித்தார். இந்நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இரவு 11 மணிக்குப்பிறகு மதுபானம் குடிக்க வேண்டுமென்றால் அதற்கான இடமொன்று இல்லையென்றும் குறிப்பிட்டார். பாராளுமனற்த்தில் சுற்றுலாத்துறை அமைச்சின் நிதியொதுக்கீட்டு விவாதத்தில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டில் கஞ்சா ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கவேண்டுமென தொடராக இவர் குரல் கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலான பௌத்த பிக்குகள் பௌத்த நாட்டில் இவற்றுக்கு அனுமதி வழங்கக்கூடாது என ஆட்சேபித்து வருகின்றனர்.

### எனது உதவி மஹிந்தவுக்கு மட்டுமே பஷில் கூறுகிறார்

சிறிது காலம் வெளிநாடு சென்றிருந்து தாயகம் திரும்பிய முன்னாள் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ இலங்கை வந்ததும் தேர்தல் தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வு அறிக்கைகளை பார்த்த பின்னர் அதிர்ச்சியடைந்துள்ளார். எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல் ஒன்றில் ஐக்கிய மக்கள் சக்திக்கு 51 சதவீத வாக்குகளும், ஜே.வி.பி. இரண்டாம் இடத்துக்கு பெறுமென்றும், மொட்டுக் கட்சி 31.2 சதவீத வாக்குகளையும் பெற என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த புள்ளி விபரங்கள் பஷிலுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்தள்ளது. இது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக பஷில் தமது முக்கியஸ்தருடன் கதவுகளை மூடி மந்திர ஆலோசனைகளை மூடி ஆலோசனை நடத்தி வருவதாக மொட்டுக் கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன. நாம் இப்போது குடும்ப அரசியல் இருந்து மீட்சி பெற்றுள்ளேன். எனது இணைப்பு இனி மஹிந்த ராஜபக்ஷவுடன் மட்டுமே என்று அவர் கருத்துத் தெரிவித்தள்ளதோடு, கோத்தாபே ராஜபக்ஷ குறித்து அதிருப்தியான கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார்.

இந்த நாடு இந்த நிலைக்குத் தள்ளப்படுவதற்க ராஜபக்ஷ குடும்பமே காரணமென என குற்றம் எழுகின்றது என கேள்வி கேட்ட பொதே, அப்படித்தான் கூறுகிறார்கள். ஆனால் ராஜபக்ஷ குடும்பம் இல்லையென்றால் இந்த நாடே இருந்திருக்காது. ஆதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இந்த நாட்டில் இருந்திருக்கமாட்டார்கள். இன்று இருக்கும் நிலைக்கு ராஜபக்ஷ குடும்பம் தான் காரணமென குற்றம்சாட்டுவது தவறானது. ஏனெனில் இந்தக் குடும்பத்தினால் தான் இந்த நாடு மிஞ்சியிருக்கின்றது.

இந்தப் பேட்டியில் கோத்தாபய ராஜபக்ஷ பற்றியும் பாதகமான சில கருத்துக்களை பஷில் தெரிவித்திருக்கிறார்.

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 DECEMBER 04 - SUNDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

# மின் அதிகரிப்பானது
## நாட்டு மக்களுக்கு செய்யும் துரோகம்

மின்சார கட்டணத்தை நூறு சதவீதமாக அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது. இதன்படி 2023 ஜனவரி முதலாம் திகதி முதல் தற்போது அதிகரிக்கப்பட்டிருக்கும் மின்கட்டணம் மீண்டும் 75 சதவீதத்திலிருந்து 100 சதவீதப் பெறுமானத்தில் அதிகரிக்கப்படவிருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சராகவும், காஞ்சன விஜேசேகர மின்சக்தி எரிபொருள் அமைச்சராகவும் கூட்டாக சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வங்கியுள்ளது.

இந்த அமைச்சரவை பத்திரப்படி இவ்வாண்டு ஆகஸ்ட் மாதத்தில் மின்கட்டணம் அதிகரிப்பட்டபோதும், செப்டெம்பர் மாதம் ஆகும் போது ஏற்பட்ட நஷ்டம் 399 பில்லியன் ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மின்கட்டண அதிகரிப்பை செய்தே ஆகவேண்டுமென்று மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர வாதாடி வருகிறார். இந்த விடயத்தில் அமைச்சர் வட்டிக் கடை காரர் போன்றே செயற்படுகிறார்.

இந்த கட்டண அதிகரிப்புக்கு மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு இன்னும் இணக்கம் தெரிவிக்கவில்லை. மின்சக்தி எரிபொருள் அமைச்சில் இடம்பெற்று வரும் அத்தியாவசியமற்ற அநாவசிய செலவுகள் மற்றும் செயற்திறமை இன்மை காரணமாக இந்த கட்டண உயர்வை அங்கீகரிக்க முடியாதென மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பது நாட்டின் பொருளாதாரத்துக்கு விழுந்த ஒரு பேரிடியாகவே அமையும். இது இவ்வாறிருக்க மின்கட்டணத்தின் ஓர் அலகின் குறைந்த கட்டணமாக 50 ரூபாவாக இருக்கவேண்டுமென பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது வருமானம் குறைந்தவர்களுக்கு ஒரு அலகுக்கான கட்டணம் 8 ரூபாவாகும். இதனை 50 ரூபாவாக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மின்சாரப் பாவணையாளர் சங்கம் தெரிவித்துள்ளதன் படி 30 அலகினை பயன்படுத்துவோரின் கட்டணம் 1500 ரூபாவாகவும், 100 அலகினை பயன்படுத்துவோரின் கட்டணம் 8000 ரூபாவாக அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டண அதிகரிப்பினால் நாட்டின் பொருளாதாரம் மேலும் அதளபாதாளத்திற்கு செல்வதை தடுக்க முடியாது. எனவே அரசு இது தொடர்பான தீர்மானத்தை மீள்பரிசீலினை செய்யவேண்டும். அரசுக்கான வருமானம் குறைந்திருப்பது உண்மை. அதற்காக மாற்று வழிகளை யோசிக்கவேண்டும். நிலக்கறியை இறக்குமதி செய்வதிலும் பாரிய நெருக்கடிகள் உள்ளன. இந்தப் பின்னணியில் அடுத்தாண்டு நடுப்பகுதியில் நாடு இருளில் மூழ்கக் கூடிய நிலைமை ஏற்படுமென அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக நாட்டில் சோலா மின்திரட்டுத் திட்டம் ஒரு தீர்வாக இருந்தாலும் அதற்கான கட்டணம் சாதாரண மக்களால் பயன்படுத்தக்கூடியதாக இல்லாதிருப்பதால் மாற்று வழிகளை முறைகளை பெறுவதற்கு சாதாரண மக்களால் முடியாதிருக்கின்றது.

எது எவ்வாறான போதிலும் இன்றுள்ள சூழ்நிலையில் மின்கட்டணத்தை அதிகரிப்பது தமக்கு வாக்களித்த மக்களுக்கு மாத்திரமன்றி மற்றவர்களுக்கும் செய்யும் துரோகமாகவே அமையும்.

எனவே இச்சந்தர்ப்பத்தில் நாங்கள் கேட்பது மின் அதிகரிப்பது மீள பரிசீலிக்கப்படவேண்டும் என்தாகும்.

# பாக்கிஸ்தான் நிதித்திட்டத்தின் கீழ் மன்னாரில் பொது கிணறுகள் திறந்து வைப்பு!










மன்னாரில் பதினைந்து பொது குடிநீர் கிணறுகளை பாக்கிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் பர்கி திறந்து வைத்தார்.இலங்கையின் வட மாகாணத்துக்கான தனது விஜயத்தின் போதே இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்த குடிநீர் கிணறு திட்டமானது முதன்முதலில் பாகிஸ்தான் அரசின் சார்பில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தால் தொடங்கப்பட்டது. இந்த திட்டம் சுமார் 40 கிமீ பரப்பளவை உள்ளடக்கியது.

இதன் மூலம் சிறுவர் பாடசாலை, பள்ளிவாசல் உட்பட 200க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயனடைகின்றனர். மேலும் மன்னாரில் உள்ள நான்கு பாடசாலைகளுக்கு கணினிகளை உயர்ஸ்தானிகர் வழங்கி வைத்ததோடு தகுதியான பெண்களுக்கு தையல் இயந்திரங்களையும் வழங்கி வைத்தார்.

உயர்ஸ்தானிகர், யாழ்ப்பாண மேயர் மற்றும் யாழ்ப்பாண பள்ளிவாசல் இமாம் ஆகியோரை நேரில் சந்தித்ததோடு பரஸ்பர இருதரப்பு விடயங்களையும் கலந்துரையாடினர். அத்தோடு , கிளிநொச்சி கட்டளைத் தளபதி மற்றும் 54 ஆவது இராணுவத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதியையும் உயர்ஸ்தானிகர் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு மற்றும் இராணுவ சிவில் உறவுகளை வலுப்படுத்துவதற்கான விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன. மேலும், அனுராதபுரத்தில் மிக வணக்கத்திற்குரிய பௌத்த பிக்குகளையும் சந்தித்து பேசினார். பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயமானது, பாகிஸ்தான் அரசாங்கத்தின் சார்பாக எப்போதும்அனைத்து இலங்கை மக்களுக்கும் உதவிக்கரம் நீட்டும் என உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி , பாகிஸ்தானிய அரசாங்கம் 'அல்லாமா இக்பால்' புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இலங்கை மாணவர்களுக்கு பாகிஸ்தானின் முன்னோடியான பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி வருகின்றது. அதனடிப்படையில் இவ்வருடத்திற்கான புலமைப்பரிசில் அண்மையில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



பிரதமர் தினேஷ் குணவர்தன முன்னாள் சீன ஜனாதிபதி ஜியாங் செமீனின் மறைவு குறித்து கொழும்பில் உள்ள சீன தூதுவராலயத்தில் வைக்கப்பட்டுள்ள அனுதாப புத்தகத்தில் கையொப்பமிட்ட போது எடுக்கப்பட்ட படம்.

# மொனறாகலை மாவட்டத்தின் மீழாத் விழா




(ஏ.எச்.எம்.சிஹார், பகினிகஹவெல)

மொனறாகலை மாவட்டத்தின் மீழாத் விழா மற்றும் மதுரசத்து நுரில்லாவின் பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 26-27ம் திகதியில் நடைபெற்ற விழாவில் பலர் பங்கு கொன்றதோடு மொ/ பகினிகஹவெல முஸ்லிம் மத்திய கல்லுரி மாணவர்களின் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அத்துடன் மத்ரசது நுரில்லாவின் பகுதி நேர குர்ஆன் மனன வகுப்பில் கலந்து கொண்டு குர்ஆனை மனனம் செய்த ஹாபிழ்களுக்க பட்டமளிப்பும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக மொனறாகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர்கள், உறுப்பினர்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் , நன்கொடையார்கள் மற்றும் நலன்விரும்பிகள் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது மீழாத் விழா நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி கௌரவிக்டப்பட்டனர்.

# ஜாமிஆ மனாருல் ஹுதாவில் பட்டமளிப்பு விழா!



வடமேல் மாகணம், குருநாகல் மாவட்டம் உடுபத்தாவ பிரதேச சபைக்கு உட்பட்ட திவுரும்பொல என்றழைக்கப்படும் பசுமை எழில் கொஞ்சும் கிராமத்தில் அமைந்துள்ள ஜாமிஆ மனாருல் ஹுதா அரபுக் கல்லுரியின் 17 வது பட்டமளிப்பு விழாவும் 40 ஆண்டு நிறைவு விழாவும் எதிர்வரும் (11- 12- 2022) ம் திகதி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் 44 ஹாபிழ்களும், 71 ஆலிம்களும் பட்டம் வழங்கி கௌரவிக்கப் பட உள்ளதோடு ஜாமியா மனாருல் ஹுதாவின் ஸ்தாபகத் தலைவர் அல்ஹாஜ் மர்ஹூம் கே. எம். எம் ஹலாலுத்தீன் மிஸ்பாஹி ஹழ்ரத் அவர்களின் நினைவாக " வாழ்வியல் நினைவுகள் " எனும் சிறப்பு நூலும் வெளியிட்டு வைக்கப்பட உள்ளது. மத்ரஸாவின் தற்போதைய அதிபர் மதிப்பிற்குரிய அஹ்மத் ஹலாலுத்தீன் மிஸ்பாஹி ஹழ்ரத் அவர்களின் வழி காட்டலில் நடைபெறும் இவ்விழாவிற்கு மத்ரஸ ாவின் நிர்வாகக் குழுத் தலைவர் எம். எச். முஹம்மத் அவர்கள் தலைமை தாங்குவார்கள்.

# காரைதீவில் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களை வைத்திருந்தவர்களுக்கு சிவப்பு அறிவித்தல்






(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர் தலைமையில் காரைதீவு 06 மற்றும் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் விசேட டெங்கு கள பரிசோதனை நடைபெற்றது. இதன்போது பரிசோதனை செய்யப்பட்ட 377 வீடுகளில் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களை வைத்திருந்த 05 வீடுகள் 02 வெற்று காணிகளுக்கு சிவப்பு அறிவித்தல்களும் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர் பொதுமக்களுக்கு அதிகமாக நுளம்புகள் பெருக்கம் இடங்கள் சம்பந்தமான விடயங்களையும், டெங்கின் தாக்கத்தினால் ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பிலும் இதன்போது விளக்கினார்.

இந்த விசேட டெங்கு கள பரிசோதனையில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள், வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்கள், மற்றும் நுளம்பு கள தடுப்பு பிரிவினர்கள், காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம நிலதாரிகள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொதுமக்களும் இணைந்து டெங்கு தள தடுப்பு பரிசோதனையில் கலந்து கொண்டார்கள்.

# சிவனடி பாதமலை பருவ காலம் ஆரம்பத்தையொட்டி மஸ்கெலியா - நல்லதண்ணி வீதி சிரமதான பணி!





(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா எரிபொருள் நிரப்பும் நிலைய பகுதியில் இருந்து நல்லதண்ணி வரை உள்ள பிரதான வீதியில் உள்ள அனைத்து குப்பைகளையும் அகற்றும் சிரமதான பணி ஒன்றை ஞாயிறு (04) முதல் சமூக ஆர்வலர்கள் மற்றும் பொலிசார், அதிரடி படையினர், கிராம உத்தியோகத்தர்கள், சுகாதார பிரிவினர் தோட்ட தொழிலாளர்கள் மேற் கொண்டனர்.

மஸ்கெலியா பிரதேச சபையின் தலைவர் மற்றும் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யசரத்ன பண்டார ஆகியோர் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

உக்கும் உக்கா குப்பைகள் அகற்ற பட்டு குப்பைகள் அனைத்தையும் மஸ்கெலியா பிரதேச சபையின் கழிவு பொருட்கள் சேகரிக்கும் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இச் சேவைக்கு புரவுன்லோ கிராம அபிவிருத்தி சங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியது.

# புத்தளம் மாவட்ட அஹதிய்யா பாடசாலை ஆசிரியைகளுக்கு சீருடை வழங்கி வைப்பு



புத்தளம் மாவட்டத்தில் இயங்கிவரும் அஹதிய்யா பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற பெண் ஆசிரியைகளுக்கு சீருடை வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பீ.ஹேரத் அவர்களின் தலைமையில்

மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் (டிச. 01) நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் அஷ்ஷேஹ் ஏ.எம்.எம். இப்ஹாம், உயர் அதிகாரிகள் மற்றும் அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளன உறுப்பினர்கள், அஹதிய்யா பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

பேட்டி: ரம்ஸி ராஸிக்



# தீய அரசியல்வாதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும்

தீய அரசியல்வாதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இன்று மக்கள் மத்தியில் மேலோங்கியுள்ளது.

நாட்டில் நிலவும் தற்போதைய நெருக்கடி நிலை குறித்து களனி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கண்ணியத்திற்குரிய கல்கந்தே தம்மாநன்த தேரர் அவர்கள் நெறளிடரள பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார்.

அவருடைய பேட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

இலங்கையின் இன்றைய நிலையானது சர்வதேச ரீதியில் பலராலும் கேலி செய்யப்படும் அளவிற்கு நலிவடைந்திருக்கின்றது. இந்தியாவின் ஒரு தேசியப் பத்திரிகையில் இலங்கையின் தேசியக் கொடியானது கேலிச் சித்திரமாக காட்டப்பட்டிருந்ததனை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். கொடியில் இருக்கின்ற சிங்கம் மிகவும் மெலிந்து ஒடுங்கி இருப்பதாக சித்திரத்தில் காட்டப்பட்டிருந்தது. அது மாத்திரமல்ல வெளிநாடுகளில் கடன் கேட்கும் போது அந்த நாடுகளில் தொழிலுக்காக சென்றிருக்கின்ற இலங்கையர்கள் தாங்கள் தொழில் புரியும் நாட்டில் நீங்கள் கடன் கேட்டால் அவற்றை எங்களிடமிருந்து இந்நாட்டு அரசாங்கம் அறவிட்டுக் கொள்ளலாம் எனவே கடன் வாங்காதீர்கள் என்பதாக சமூக ஊடகங்கள் வழியாக குறிப்பிடுகின்றனர். இலங்கை சர்வதேச ரீதியில் மிகவும் கேலிக்கு உட்படுத்தப்படுகிறது என்பதற்கு இவை சிறந்த உதாரணங்களாகும்.

### சுய விசாரணையின் அவசியம்:

உள்நாட்டு ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்ற இலங்கையினை மீட்டெடுப்பதற்காக இலங்கையில் வாழ்கின்ற அனைத்து மக்களும் சுயவிசாரணை ஒன்றினை மேற்கொள்வது காலத்தின் தேவையாகும். நாம் வாழ்கின்ற நாடு முன்னேற்றத்தை நோக்கிச் செல்லாமல் அதல பாதாளத்தை நோக்கிச் செல்வதற்கு நான் எப்போதாவது காரணமாக இருந்திருக்கின்றேனா என்பதை இந்த சுய விசாரணையின் ஊடாக கண்டறிவதற்கு முயற்சிக்க வேண்டும்.

- யாரையேனும் ஆட்சி பீடத்தில் ஏற்றுவதற்காக நாம் மதவாதம் இனவாதம் என்பவற்றை பயன்படுத்தியுள்ளோமா?
- இது போன்ற செயற்பாடுகளுக்கு நாம் அனுசரணை வழங்கியுள்ளோமா?

குறித்த சுய மதிப்பீடு மேலே குறிப்பிடப்படுகின்ற தலைப்புக்களின் அடிப்படையில் அமைவது சிறந்தது.

பொதுவாகவே ஓர் சமூகத்தில் சுய பாதுகாப்பு பற்றிய பய உணர்வு ஏற்படும் போது தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்ற பேசு பொருள் அந்த மக்கள் மத்தியில் உருவாகிறது. கிராமப்புரங்களில் விவசாய நிலங்களில் தங்களது விவசாய அறுவடைகளை திருடிச் செல்வதற்கு ஒரு சிறு குழுவினர் இருக்கின்றனர் என்ற பயம் ஏற்படும் போது ஒட்டு மொத்த கிராமத்தவர்களும் எமது கிராமத்தை பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் ஒன்றிணைகின்றனர்.

அவ்வாறு ஒன்றிணைகின்ற வர்கள் அந்த திருட்டுக் கும்பலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள பலம் பொருந்திய ஒருவரை நாடுகின்றனர் அல்லது பலம் பொருந்திய ஒருவரே தங்களைப் பாதுகாப்பார் என நம்பிக்கை கொண்டு அத்தகைய ஒருவரிடம் தங்களது கிராமத்தையே ஒப்படைத்து விடுகின்றனர்.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது முதற்கொண்டே இத்தகைய பயத்தைப் பயன்படுத்தி அனைத்து அரசியல்வாதிகளும் ஆட்சியினைப் பிடித்துக்கொள்ள முயன்றிருக்கின்றனர். அதாவது நாட்டில் ஒரு குழுவினரால் நாடு ஆக்கிரமிக்கப்படப் போகின்றது என்பதாக ஒரு கருத்தாடல் மக்கள் மத்தியில் உருவாக்கப்படுவதும் பின்னர் நாட்டை ஆக்கிரமிக்கப் போகின்ற குழுவாக ஒரு இனம் அடையாளப்படுத்திக். அதனைத் தொடர்ந்து நாட்டின் அனைத்து மக்களும் அந்தக் குழு தொடர்பில் அச்சம் கொள்ளத் தொடங்குவர். பின்னர் தங்களால் இயன்ற அளவில் எதிர்ப்புக்களையும் வெளிக்காட்டத் துவங்குவர். இந்த சந்தர்ப்பத்தில் அகன்ற மார்பும் அடரத்தியான மீசையும் கொண்ட ஒருவர் சமூகத்தில் மிகவும் பலம் பொருந்திய நபராக அறிமுகம் செய்யப்படுவார். அத்துடன் நாட்டை தீய சக்திகளிடம் இருந்து பாதுகாக்கும் பலம் இவரிடம் மாத்திரமே காணப்படுகிறது என்பதாக மக்கள் நம்ப வைக்கப் படுவார்கள்

இந்த அடிப்படையில் தான் மக்களிடம் காணப்படுகின்ற பயத்தினை ஆட்சியாளர்கள் பயன்படுத்தி காலா காலமாக ஆட்சி பீடம் ஏறி வருகின்றர்.

### இனவாதம்:

இந்த நாட்டில் இனவாதம் என்பது அனைத்து காலங்களிலும் காணப்பட்டது. எனினும் எத்தகைய காலங்களில் இந்த இனவாதம் அதிகமாக காணப்படுகிறது என்பதை ஆராய்ந்து பார்க்க முயற்சித்தோம். இதற்காக சமூக ஊடகங்கள் அச்சு ஊடகங்கள் என்பவற்றில் பகிரப்படுகின்ற விடயங்களை வைத்து ஆராய்ந்து பார்த்தோம். நாட்டில் நெடுகிலுமே இனவாதம் என்பது அதிக அளவில் தலைவிரித்தாடுகின்ற காலமாக தேர்தல்கள் நடைபெறுவதற்கு அண்மித்த காலங்கள் அடையாளம் காணப்பட்டன. இந்த தரவுகளின் அடிப்படையில் நோக்கும் போது அனைத்து பிரிவினை வாதங்களும் அரசியல் நோக்கங்களுக்காகவே உருவாக்கப்பட்டது என்பது தெளிவாகின்றது.

### மாற்றத்திற்கான அடையாளம்:

இன்று நாட்டு மக்கள் அனைவரிடமும் ஒரு எழுச்சி ஏற்பட்டிருக்கின்றது நாட்டை தீய அரசியல்வாதிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் உருவாகத் துவங்கியுள்ளது. நாட்டு மக்கள் அனைவருமே நாட்டை மீட்டெடுக்கின்ற நோக்கில் சாதி இன மொழி பேதம் மறந்து அனைவரும் ஓரணியாக நின்று போராடத்துவங்கியிருக்கின்றனர். நாட்டில் இவ்வளவு காலமும் காணப்பட்டு வந்த இன மத மொழி ரீதியிலான வேறுபாடுகளை நாட்டு மக்களிடமிருந்து களைவதற்கு இந்த சந்தர்ப்பத்தை மிகவும் சிறப்பாக பயன்படுத்திக்கொள்வதற்கான முயற்சிகள் வரவேற்கப்படுகின்றன. இதற்காக நமது புத்த பிக்குகள் தங்களது இருக்கைகளிலிருந்து இறங்கி வரவேண்டும். அத்துடன் புத்த மதம் என்பது சிங்களவர்களுக்கு மாத்திரம் சொந்தமான ஒன்றல்ல என்பதுடன் அது அனைத்து உலக மக்களுக்குமான ஒரு வாழ்க்கை நெறி என்ற அடிப்படையில் அதன் போதனைகள் அனைத்து மக்களையும் சென்றடையச் செய்வதுடன் அவற்றின் ஊடாக இன மத பேதங்களை நீக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

### மாற்றத்துக்கான பயணத்தில் தற்போது எதிர்கொள்கின்ற சவால் :

தற்போது இலங்கை பாரிய பொருளாதார பிரச்சினையினை எதிர்நோக்கிய நிலையில் காணப்படுகின்றது.

இந்த நிலையில் உணவு உடை உறையுள் போன்ற அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய சிரமப்படுகின்ற நிலையிலேயே புதிய இலங்கை என்பதனை நோக்கி பயணிப்பதற்கு ஆயத்தமாகின்றோம். ஒரு குழந்தையைப் பிரசவிப்பதற்காக தாய் ஒருவர் பிரசவவேதனையினை பொறுத்துக் கொள்வது எவ்வாறோ அதே போன்று புதிய இலங்கை ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### பேதங்களை ஒழிப்பதில் புத்த பிக்குகளின் பங்கு :

காலி முகத்திடல் போராட்டத்தின் போது அதில் பங்குபற்றிய ஒருவர் காண்பித்துக் கொண்டிருந்த பதாதை ஒன்று எனது நினைவில் அடிக்கடி வந்து போவதுண்டு. 'நாட்டுக்கு வேலிகள் இடுவதற்கு போதுமான அளவு தூண்களும் கம்பிகளும் எம் வசமுள்ள. புத்த பிக்குகள் வேலியாக இருக்கத் தேவையில்லை" என்பதாக அந்தப் பதாதையில் பொறிக்கப்பட்டிருந்தது. எனவே இந்த நாட்டின் மக்கள் புத்த பிக்குகளிடம் இருந்து ஏதோ ஒன்றை எதிர்பார்க்கின்றனர். நாட்டை பிரித்து ஆள்வதற்கு புத்த பிக்குகளும் துணை போகின்றார்கள் என்பதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம். நாட்டைப் பாதுகாப்பதற்கு ஹிட்லர் ஒருவர் வரவேண்டும் என்பதாக எந்த ஒரு பிக்குவும் குறிப்பிட முடியாது. அனைவருக்கும் அன்பு காட்டுமாறு போதிக்கின்ற புத்த தர்மத்தின் வாழ்கின்ற பிக்கு ஒருவர் ஒருபோதும் வன்முறைகளுக்கு துணை நிற்க முடியாது.

### கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகள் :

புத்த தர்மத்தினைப் போதிப்பதன் ஊடாக நாம் வேற்றுமையில் ஒற்றுமை காண்கின்ற நிலையை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

இன பேதம் மதவாதம் என்பன இல்லாத புதிய இலங்கையினைக் கட்டியெழுப்புதல் என்ற நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக புத்த பிக்குகளின் சமூகம் புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டும். கிறிஸ்தவ மதம் வத்திக்கானில் ஒன்று சேர்க்கப்பட்டு இருப்பது போன்று புத்த பிக்குகளும் தங்களை புனர்நிர்மாணம் செய்து கொள்ள வேண்டும். இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக நாம் சுய விசாரணை முறைமை ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

சாதி வேறுபாடு காட்டுவது என்பது மிகவுமே வெட்கப்படக்கூடிய செயற்பாடொன்றாகும் பிக்குகள் மத்தியில் காணப்படுகின்ற சாதி வேறுபாடுகள் ஒழிக்கப்பட வேண்டும்.

அன்பு காட்டுதல் என்பதன் அடிப்படையில் மத்தியஸ்த செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட வேண்டும்.


நாம் பிறக்கும் போது இந்த நாடு நலிவடைந்த ஒரு நாடாக இருப்பது எமது குற்றமல்ல. ஆனால் நாங்கள் இறந்து போகின்ற போதும் எமது நாடு ஏழ்மையானதாக நலிவடைந்த நிலையில் இருக்குமாயின் அது எமது இயலாமையினால் ஏற்பட்ட ஒன்றாகும். எனினும் இவ்வாறான ஏழ்மையான நாட்டை நாம் எமதுஅடுத்த தலைமுறைக்கு ஒப்படைப்பதாயின் அது அடுத்த தலைமுறைக்கு செய்கின்ற பாரிய ஒரு துரோகமாகும். இது எமக்கு அவமானத்தினை தருகின்ற ஒன்றாகவும் காணப்படுகின்றது. எனவே அனைத்தையும் துறந்துவிட்டு உலக சாந்திக்காக அர்பணிப்புடன் செயற்படுகின்றவர்கள் என்ற அடிப்படையில் இலங்கையினை இந்த நிலையிலிருந்து மீட்பதற்காக அனைத்து புத்த பிக்குகளுக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன்.

---

# நிந்தவூரில் பி.எச்.அப்துல் ஹமீத் கலந்து கொண்ட இளைய தலைமுறையினருக்கான வழிகாட்டல் மாநாடு..!







(நூருள் ஹுதா உமர், எஸ். அஷ்ரப்கான்)

இளைய தலைமுறையினருக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர் வழிகாட்டல் மாநாடு சனியன்று (03) சனிக்கிழமை காலை கல்முனை வலய நிந்தவூர் கமு/ கமு/ அல் - அஷ்ரக் தேசிய பாடசாலையின் காஸிமி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலை அதிபர் ஏ. அப்துல் கபூரின் பங்களிப்புடன், அஸ்ஸெய்யத் றஸ்மி மௌலானாவின் ஒருங்கமைப்பில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹதுல் நஜீமின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஒலிபரப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் பிரதம அதிதியாகவும் பிரதம பேச்சாளராகவும் கலந்து கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை பொதுச்செயலாளர் அஷ்ஷெக் மௌலவி அர்கம் நூறாமித், முஸ்லிம் சமய பண்பாட்டாலுவல்கள் திணைக்கள பிரதிப்பணிப்பாளர், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எம்.பி. அப்துல் வாஜித் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ஆசாத் எம் ஹனிபா, கல்முனை கல்வி வலய உதவிக்கல்வி பணிப்பாளர்கள், பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், மாணவ தலைவர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், கல்விமான்கள், சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், புகழ்பெற்ற ஊடகவியலாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

---

# ஓ.எல். பரீட்சையில் நானுஓயா டெஸ்போட் தமிழ் வித்தியாலயம் சிறப்பு வினைதிறன்



(செ.திவாகரன்)

2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அன்மையில் வெளியாகியிருந்தது.

இவ்வாறு வெளியான பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 27 வருட பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக 77 வீதம் சித்தியைப்பெற்றுள்ளதாகவும் கடந்த வருடம் 66 வீதம் சித்தியைப்பெற்றமை குறிப்பிடத்தக்கது .

இது தொடர்பில் பாடசாலை அதிபர் எஸ் .சிவபாலசுந்தரம் கருத்து தெரிவிக்கையில்,

அண்மையில் வெளியாகிய கா.பொத சாதாரண தரப்பரீட்சை முடிவுகளுக்கு அமைய கணிதம் உட்பட எட்டுப்பாடங்களில் மாணவர்கள் 77 வீத சித்தியைப்பெற்றுள்ளனர். தமிழ்,கணிதம், சமயம், ஆங்கிலம், வரலாறு போன்ற பாடங்களில் சிறந்த சித்தி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் ,

இப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற சகல மாணவர்களுக்கும் , கற்பித்த ஆசிரியர்களுக்கும் தமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் பாடசாலை சமூகம் சார்பாக தெரிவிப்பதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார் .



# பரீட்சை முடிவுகளும் அடுத்தகட்ட நகர்வுகளும்!

## எவ்வாறு அமைய வேண்டும்?



எம்.எஸ். அமீர் ஹுசைன்

2021 ஆம் ஆண்டு நடந்து முடிந்த க.பொ.த. (சா/ தர) பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகி உள்ளன. இந்த பரீட்சைக்கு தோற்றிய 518,245 மாணவர்களுள் 231, 982 மாணவர்கள் குறைந்தபட்ச தகைமை உட்பட க.பொ.த (உ/ தர) வகுப்புகளில் கற்கும் தகைமையை பெற்று சித்தியடைந்துள்ளனர். இவர்களில் 10863 பேர் 09 A அதி கூடிய தராதரமான ஏ சித்தியை பெற்றுள்ளனர். அதே நேரம் 6568 மாணவர்கள் எந்தவொரு பாடத்திலும் சித்தியடைய தவறியவர்களாக 9W பெற்றவர்களாக உள்ளனர் என்று இலங்கை பரீட்சை திணைக்களத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு பாடசாலையும் தமது பாடசாலையில் பரீட்சைக்கு தோற்றிய எண்ணிக்கையில் மொத்தமாக 09 பாடங்களில் கணிதம், தமிழ் மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்து அதில் 03 பாடங்களில் சீ (6 subject a with 3C) சித்தியுடன் சராசரியாக சித்தியடைந்துள்ள விகிதாசாரத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு தமது பாடசாலை குறிப்பிட்ட மாவட்டத்தில், மாகாணத்தில் அல்லது கல்வி வலயத்தில் முன்னிலையில் இருக்கின்றது என்று புகழாரம் சூடி வருகின்றமை பரீட்சை பெறுபேற்றின் பின்னர் நடைபெறுகின்ற பொதுவான நிகழ்வாகும்.

அதிலும் மாவட்ட அல்லது வலய மட்டங்களில் மொத்தமாக பெரிய, சிறிய பாடசாலைகள் என்ற பேதம் இல்லாமல் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுகின்ற எண்ணிக்கையில் குறைந்தபட்ச தகைமையுடன் மாணவர்கள் சித்தியடைகின்ற விகிதாசரத்தின் அடிப்படையில் பட்டியலில் முதலாம் இடம் என்றும் இரண்டாம் இடம் என்றும் நிலைகளை அடைந்து வருகின்றன. உதாரணமாக கேகாலை மாவட்டத்தில் மாவனல்லை கல்வி வலயத்தில் உள்ள 15 தமிழ் மொழிமூல பாடசாலைகளில் க.பொ.த (சா/ தர) பெறுபேறுகளின் அடிப்படையில் முதலாம் இடத்தை பெற்றிருப்பது தல்கஸ்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயமாகும். இந்த பாடசாலையில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 38 ஆகும். இவர்களில் 34 பேர் உயர் தரத்தில் கல்வி கற்கும் தகுதியை பெற்றிருப்பதோடு மொத்த எண்ணிக்கையில் சித்தியடைந்த வீதம் 89% அகும்.

அந்த அடிப்படையில் இரண்டாவது ஸ்தானத்தில் ஹெம்மாதகமை கொடேகொட முஸ்லிம் மகா வித்தியாலயமும் மூன்றாவது இடத்தில் தெல்கஹகொடை முஸ்லிம் வித்தியலயமும் இருக்கின்றது. வலயத்தில் உள்ள 15 தமிழ் மொழிமூல பாடசாலைகளில் மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி 05 ஆவது இடத்திலும் சாஹிரா தேசிய பாடசாலை 08 ஆவது இடத்திலும் இருக்கின்றது. இவ்வாறாக பெறுபேருகளை அடிப்படையாக வைத்து பாடசாலைகள் தமது தராதரத்தை உயர்த்திக் கொள்வது பிரதானமான விடயமாக இருக்கின்றது. கல்லூரிகளின் பெயரும் புகழும் சிறந்த பரீட்சை முடிவுகளைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. அதனால் எல்லா பாடசாலைகளும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, சாதாரண தர பரீட்சை மற்றும் உயர் தர பரீட்சை ஆகியவற்றின் முடிவுகளை இலக்கு வைத்து கல்விப் பயணத்தை திட்டமிட்டு வருகின்றன.

ஆனாலும் க.பொ.த (சாதர) முடிவுகளின் பின்னர் மாணவர்களது அடுத்த கட்ட நகர்வை மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய தார்மீக பொறுப்பாக இருந்து வருகின்றது. குறிப்பாக சித்தியடைந்துள்ள வீதத்தை எடுத்துக்கொண்டால் எல்லா ஊர்களிலும் ஆண் மாணவர்களின் எண்ணிக்கையில் கணிசமான வீழ்ச்சி காணப்படுகின்றது. மாணவியர் கூடுதலாக உயர் தரத்தில் கற்பதற்கு தகைமை பெற்றுள்ளனர். புள்ளிவிபரங்களை எடுத்து பார்க்கும் போது மாணவர்களின் திறமைகள் வெளிப்படாமைக்கான காரணங்கள் என்ன? சித்தியடையத் தவறியவர்களது எதிர்காலம் என்ன? அவர்களுக்கு அடுத்த நகர்வுக்கு எவ்வாறான வசதிகளை செய்வது, வழிகாட்டல் செய்வது போன்ற பல பிரச்சினைகள் கல்விச் சமூகம் சந்திக்கின்ற சவால்களாக உள்ளன. சாதாரண தரத்தில் வழிதவறிய மாணவர்களால் அடுத்த என்ன செய்வதென்று அறியாத நிலையில் அவர்களே சமூகத்திற்கு பாரமாக மாறுகின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் பார்க்கின்ற போது பாடசாலையில் 06 ஆம் வகுப்பு முதல் ஆண் மாணவர்களது கல்வித் துறையிலான ஆர்வம் குறைவடைந்து காணப்படுகின்றமை, வகுப்புகளில் கற்பிக்கின்ற போது ஒருசில மாணவர்களது சண்டித்தனம், குழப்பம் காரணமாக கற்பிக்கின்ற ஆசிரியர்களும் பாடசாலை நேரங்களில் கற்பிப்பதில் கடுமையான சவால்களை எதிர்நோக்குகின்றனர். இத்தகைய மாணவர்களால் ஏற்படும் பிரச்சினை சாதாரண தர பரீட்சைக்கு தயாராகும் நிலையில் பாரிய பிரச்சினையாக வெளிபப்டுகின்றது.

அதனால் சில பாடசாலைகளில் நல்ல முறையில் ஆர்வத்துடனும் உட்சாகமாகவும் கற்கும் மாணவர்களையும் ஆர்வம் குறைந்த அல்லது முக்கியமான பாடங்களில் 40 புள்ளிகளுக்கு குறைவாக பெறுகின்ற மாணவர்களையும் வேறுபடுத்தி அவர்களுக்கு வேறாக வகுப்புகளை ஏற்பாடு செய்து கற்பிக்கின்ற நிலைமைகளும் உள்ளன. காரணம் பாடசாலை என்பது எந்தவொரு மாணவனையும் புரக்கணிக்கும் அல்லது ஒதுக்கும் இடம் அல்ல என்ற அடிப்படையில் எப்படியாவது கல்விச் சமூகத்தின் முயற்சி காரணமாக அவர்களுக்கு எதிர்காலத்தில் வாழ்க்கையை வெற்றி கொள்ள வழிகாட்ட வேண்டும் என்ற அடிப்படையில் திட்டமிடல்கள் செய்யப்படுகின்றன.

அதிலும் தவறும் மாணவர்களே இந்த மொத்த எண்ணிக்கையில் எந்தவொரு பாடத்திலும் சித்தியடையாத 6566 மாணவர்களுமாவர். எதுவானாலும் எல்லா ஊர்களிலும் சித்தியடைந்தவர்களது நலன்களில் மாத்திரம் கவனம் செலுத்தாமல் சமூகத்திற்கு சுமையாக அமைய விருக்கின்ற சித்தியடையத் தவறிய மாணவர்கள் குறித்தும் சரியான திட்டங்களை தயார்படுத்தி வழிகாட்ட வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. இவர்களாலும் வாழ்க்கையை வெற்றிகொள்ள முடியும் என்ற அடிப்படையில் உயர்தரத்திற்கு அடுத்த துறைகளுக்கு நெறிப்படுத்தப்பட வேண்டும். அதற்காக இன்று பலவிதமான தொழில்நுட்ப கற்கை துறைகள் விரிவடைந்துள்ளன. வாய்ப்புக்கள் ஏராளம் உள்ளன.

பெறுபேறுகள் வெளியாகிய பின்னர் அடுத்த கட்ட நகர்வாக அமைவது கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புகளில் எவ்வாறான துறைகளை தெரிவு செய்வதென்பதாகும். அதிகமாக சிறந்த பெறுபேற்றை பெறும் அதிகமான மாணவர்கள் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தில் மருத்துவர்களாக வரவேண்டும் என்ற குறிக்கோளில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவை தெரிவு செய்கின்றனர். ஆனாலும் பின்னர் உயர் தர பெறுபேறு போதுமான தகைமையை பெற தவறுகின்ற போது மருத்துவ துறைக்கு தெரிவாக முடியாமல் போனால் வேறு எந்த துறைகளிலும் நாட்டம் காட்டாத நிலை ஏற்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் கல்வி விரயம் அல்லது இழப்பு எற்படுகின்றது.

இன்றைய முஸ்லிம் சமூகத்தின் தேவையாக இருப்பது டாக்டர்கள் மட்டுமல்ல. அதே உயிரியல் விஞ்ஞானத்துறையில் ஏராளமான வேறும் துறைகள் உள்ளன. பிற்காலத்தில் பாடசாலைகளில் பௌதீக, கணித, உயிரியல் விஞ்ஞானத் துறைகளில் குறிப்பிட்ட பாடங்களை கற்பிப்பதற்கு போதுமான ஆசிரியர்கள் இல்லாமல் பாடசாலைகளில் விஞ்ஞானப் பிரிவுகளை மூடிவிட வேண்டிய நிலை ஏற்படலாம். அவ்வாறே உயர் தரத்தில் கலை, வர்த்தகம், உயிரியல் தொழில்நுட்பம், பொறியில் தொழில்நுட்பம், பௌதீக விஞ்ஞானம் என்ற கணிதத்துறை போன்ற துறைகளும் உள்ளன. அதனால் அதிகபட்ச திறமைகளை வெளிப்படுத்தி நல்ல பெறுபேறுகளை பெற்றுள்ள மாணவர்களை ஏனைய துறைகளில் கற்பதற்கும் அந்தந்த துறைகள் ஊடாக பல்கலைக்கழகம் செல்வதற்கும் பிற்காலத்தில் அதனோடு சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் சிறந்த அறிவுசார் வளங்களாக வெளிபப்டுவதற்கும் வழிகாட்டல்கள் செய்யப்பட வேண்டும்.

குறிப்பாக முஸ்லிம் சமூகத்தில் குறிப்பிட்ட ஒரு துறைசார்ந்த அறிவுடன் மாத்திரம் சமூக நகர்வு இருந்து வருவதால் ஏனைய துறைசார் நிபுணர்களுக்கான பாரிய பற்றாக்குறை நிலவுகின்றது. பிற்காலத்தில் பாடசாலைகளில் ஆண் ஆசிரியர்கள் இல்லாத ஒரு நிலை எற்படலாம். இப்போதுள்ள நிலையில் பார்க்கின்ற போது முஸ்லிம் பாடசாலைகளில் ஆண் ஆசிரியர்களின் நிலை 22மூ இற்கும் குறைவாகும். கல்வி நிர்வாகம், சமூகத்தை வழிநடத்தல் போன்ற விடயங்களில் ஆண்களின் பங்களிப்பு இல்லாதவிடத்து சமூகத்தை வழிநடத்துவதிலும் பாரிய சரிவு ஏற்படுகின்றன. பாடசாலைகளில் ஆண் ஆசிரியர்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தால் மாணவர்களை கட்டுப்படுத்துவது, வழிநடத்தல், ஒழுக்க மான்புகளை சரியான முறையில் கடைபிடிக்கச் செய்தல் போன்ற விடயங்களில் பாரிய சரிவுகள் காணப்படுகின்றன.

# கபூரியா அரபிக் கல்லூரியின் பழைய மாணவர்கள் ஆர்ப்பாட்டம்







(அஷ்ரப ஏ சமத்)

மகரகம கபூரியா அரபிக் கல்லூரியின் பழைய மாணவர்கள் வெள்ளியன்று கிராண்பாஸ் வீதியில் உள்ள சுலைமான் வைத்தியசாலைக்குச் சொந்தமான காணியின் முன் அமைதியான ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தினார்கள்.

கபூரியா அரபிக் கல்லூரிக்கு காலம் சென்ற கொடைவல்லல் கபூர் ஹாஜியாரினால் வக்பு அரபிக் கல்லூரிக்கு நன்கொடை செய்யப்பட்ட சுலைமான் வைத்தியசாலை சுமார் 3 ஏக்கர் காணியை சொப்லொட்ஜ் எனும் தனியார் கம்பனிக்கு விற்கப்பட்டு அங்கு நிர்மாணங்கள் நடைபெற்று வருகின்றன.

கபூர் ஹாஜியாரின் கொள்ளுப் பேரன் என்ற உறவு முறையான அஸ்மி கபூர் என்பவரே முறையற்ற முறையில் தஸ்தாவேஜூகள் தயாரித்து காணியை விற்றுள்ளார்.

90 வருடங்களுக்கு முன்பே காலஞ்சென்ற கபூர் ஹாஜியார் மற்றும் காலஞ்சென்ற சுலைமான் வைத்தியர் இதன் வருமானம் சகல சொத்துக்களும் கபூர் அரபிக் கல்லூரிக்கு கிடைக்க வேண்டி உயில் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2 வருடகாலமாக அஸ்மத் கபூர் எனும் கொள்ளுப் பேரன் முறையிலானவர் சட்டரீதியற்ற முறையில் காணி உறுதி தயாரித்து இதனை விற்றுள்ளதாக பழைய மாணவர் டில்சான் மொஹமட் தெரிவித்தார்.

மேலும், மகரகமவில் அரபுக் கல்லூரிக்குச் சொந்தமான காணியில் 2 ஏக்கரை மட்டும் அரபிக் கல்லூரிக்கு வைத்துவிட்டு ஏனைய 13 ஏக்கரை விற்பதற்காக தடுப்புச் சுவர் இட்டு அதனையும் விற்பதற்கு முயற்சித்து வருகின்றார்.

இதனால் அங்கு விடுதி தொழுகை அரைகள் மாணவர்கள் ஆசிரியர்களுக்கு இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

இதனை மீட்டெடுப்பதற்காக கடந்த 75 வருட காலத்தில் இக் கல்லூரியில் கற்ற ஆயிரக்கணக்கான மௌலவிமார்கள் விழித்தெழுந்துள்ளனர்.

இதனை நாங்கள் காப்பாற்ற முற்படுவோம். முஸ்லிம் புத்திஜீவிகள், அரசியல் வாதிதிகள், சட்டத்தரணிகள் ஒன்றுபடுமாறும் இதனை மீட்டெடுத்து தருமாறும் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அதனை தடுக்குமாறும், மகரகம கபூரியா அரபுக் கல்லுரிக்கு வக்பு செய்யப்பட்ட சுலைமானியா வைத்தியசாலைக்காணி எவ்வாறு விற்கப்படடது என்பதை உடனடியாக அரசாங்கம் நீதியமைச்சு, சி.ஐ.டியினர் நீதி வழங்குமாறு ஆர்ப்பாட்டத்தில ஈடுபட்ட ஆயிரக்ணக்கான பழைய மாணவர்கள் மௌலவிமார்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

- இதில் முன்னாள் ஆளுனர் ஆசாத் சாலி பழைய மாணவர் செயலளர் லில்சாத் மொஹமட் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

# தசாப்தங்களாக பாதுகாப்பற்ற நிலையில் உள்ள புகையிரத கடவை!



(செ.தி.பெருமாள்)

இவ் புகையிரத கடவை ஹட்டன் நகரத்தில் அமைந்துள்ள தோடு, பல திணைக்களங்கள் மற்றும் தாதியர் வீதி, வில்பட்புர, அம்மன் கோயில் வீதி கேம் வெளி கிராமம், ஆகியவற்றுக்கு மக்கள் செல்லும் பிரதான வீதியாகும், பாடசாலைக்கு செல்லும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், அதிகாரிகள் இவ் பாதையில் செல்வது அதிகம். சிறுவர் பூங்காவும் அமைந்துள்ளது. ஒருபக்கம் மாத்திரமே கடவையின் முகவாயில் பாதுகாப்பு கம்பி, அமைந்துள்ளது, மறுபக்கம் எவ்வித பாதுகாப்பும் இல்லை ,முறையான நடவடிக்கை எடுக்காவிடின் எதிர்காலத்தில் ஆபத்தை சந்திக்க நேரிடும் இவ்பாதையை பராமரிப்போர் கவனத்திற்கு கொண்டு வருகின்றனர் பாடசாலை மாணவர்கள் மற்றும் அப் பகுதியில் உள்ள மக்கள்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவணம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

# தேசிய மெய்வல்லுனர் போட்டியில் தோப்பூர் அஹ்சன் மூன்றாமிடம்!

(எஸ்.ஏ. எம்.அஸ்மி)



கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற (டிசம்பர். 03) தேசிய மெய்வல்லுனர் போட்டியில் தோப்பூர் அல் ஹம்றா மத்திய கல்லூரி தேசிய பாடசாலை சார்பாக கலந்து கொண்ட ஆர்.எம். அஹ்சன் என்ற மாணவன் தட்டெறிதல் போட்டியில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தை பெற்றுள்ளார்.

இதன் மூலம் கல்லூரிக்கும், மூதூர் வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ள இவரை , கல்லூ ரி அதிபர் எஸ்.எம். றஹீம் அவர்களின் நெறிப்படுத்தலுக்கு அமைவாக விளையாட்டு பயிற்றுவிப்பாளர் எம்.எம். சுகைல் உடற்கல்வி ஆசிரியர்களான கே.எம்.றிபாஸ் , எம். பாஹிம் மற்றும் எம்.எம்.ஹிசாம் ஆகியோர் வழிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# எமது பிள்ளைகளை ஒப்பிடாதிருப்போம்

தோட்டத்திலுள்ள மரங்களை சற்று நோக்குவோம். ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு அளவில் வளர்ந்து இருப்பதையும் ஒவ்வொரு அளவிலான காய்களைத் தருவதையும் காண்கிறோம். சில மரங்களில் கிளைகள் முறிந்து விழும் அளவிற்கு காய்கள் நிரம்பியிருக்கின்றன. சில மரங்களில் ஒரு சில கிளைகளில் மட்டும் காய்கள் தெரிகின்றன. ஒரு காயேனும் இல்லாமல் மொட்டையாக சில மரங்கள் நிற்கின்றன. பலா மரத்தில் பெரிய காய்களும் நெல்லி மரத்தில் சிறிய கனிகளும் இருக்கின்றன. நாம் எவ்வளவுதான் அவை ஒவ்வொன்றுக்கும் இடையில் வித்தியாசங்கள் கண்டாலும் அவற்றின் இயல்பான பாதையில் அவை வளர்ந்துகொண்டுதான் செல்கின்றன. குழுங்கிக் காய்த்திருக்கும் மரமும், இலைகள் உதிர்ந்து மொட்டையாக நிற்கின்ற மரமும் பல விதத்தில் எமக்கு பயனுள்ளவையாக இருக்கின்றன என்பதை நாம் அறிந்தும், மனதார ஏற்றுக்கொண்டும் இருக்கிறோம்.

எமது பிள்ளைகளும் அப்படித்தான். ஒருவருக்கொருவர் வித்தியாசமான திறன்களையும் ஆற்றல்களையும் உடையவர்கள் அதனால் அவர்களை மற்றப்பிள்ளைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கவோ ஒப்பிட்டுக் குறைகூறவோ எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை.

ஒவ்வொரு பிள்ளையும்

- தனிப்பட்ட தன்மையுடையவர்
- மேன்மையானவர்
- மற்றவருடன் ஒப்பிடப்பட முடியாதவர்
- மாறுபட்ட ஆற்றல்கலைக் கொண்டவர்

அவர்களின் வேறுபாடுகளை பாராட்டிப் புகழ்வதுடன் அவர்களது ஆர்வம், அக்கறை, கனவுகள் என்பவற்றை வெளிப்படுத்தவும் அவற்றை அடைந்து கொள்வதற்கு படிப்படியாக அறிவுறுத்தல்களை வழிகாட்டல்களை வழங்குவது பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் பொறுப்பாகும்.

இந்தப் பொறுப்பை செய்யத்தவறும் பொழுது அவர்கள் தாழ்வு மனப்பான்மை யுள்ளவர்களாக மாறிவிடவும் அல்லது எங்கள் பார்வையில் அவர்கள் "தரமானவர்கள் அல்லர்" என்ற உணர்வு ஏற்படவும் காரணமாக ஆகிவிடுவார்கள்.

"ஒவ்வொருவரும் மாறுபட்டவர்கள், வித்தியாசமான திறமைகளையுடையவர்கள் என்றும் மற்றவர்களைவிட நாம் வேறுபட்டவர்களாக இருப்பதில் எந்தச்சிக்கலும் இல்லை என்பதையும் மற்றவர்களைப் பின்பற்றி அவர்களைப்போல் நாம் இருக்க வேண்டிய தேவையில்லை" என்பதையும் பிள்ளைகளுக்கு விளக்கிச் சொல்ல வேண்டும்.

"எமது பிள்ளைகள் எமது கவனத்தில் வாழும் தனிநபர்கள்". அவர்களுக்கு ஒப்பீடுகள், வேற்றுமைகள், வித்தியாசங்கள் காட்ட முடியாது.

பிள்ளைகள் 'காபன்தாள்' போல் ஒருவர் மற்றவரைப் போல் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது. நாம் அவர்கள் ஒவ்வொருவரில் தனிப்பட்ட திறமைகளை காணவே ஆசையும் ஆர்வமும் காட்டவேண்டும். அவ்வாறு எமது பிள்ளைகளின் வேறுபட்ட திறமைகளை, வேறுபாடுகளை கண்டுபிடிப்பதன் மூலம் அவர்களின் உண்மையான ஆற்றல்களை, வீரச்செயல்களை கண்டு பெருமகிழ்ச்சியும், மனத்திருப்தியும் அடைய முடியும்.

"எமக்கு கண்குளிர்ச்சி தரும் பிள்ளைகளாக எமது பிள்ளைகள் ஆகட்டும்"



அப்ரா அன்சார்

# உலக அரங்கில் பரிதவிக்கும் சோமாலியா!

சோமாலியா உலக அரங்கில் வறுமை கோட்டின் கீழ் தள்ளாடிக் கொண்டிருக்கும் ஒரு ஆப்ரிக்கா நாடு.இதன் எல்லைகளாக வடமேற்கே ஜிபூட்டி, தென்மேற்கே கென்யா, வடக்கே யேமனுடன் இணைந்த ஏடன் வளைகுடா, கிழக்கே இந்தியப் பெருங்கடல், மேற்கே எதியோப்பியா ஆகியன அமைந்துள்ளன. சோமாலியா ஆப்பிரிக்கா கண்டத்தின் மிக நீண்ட கடற்கரையை கொண்டமைந்துள்ளது. சோமாலியாவின் வரலாறு இன்றைய சோமாலியக் கூட்டாட்சிக் குடியரசின் ஆட்சிப்பகுதியில் வரலாற்றுக்கு முந்திய காலத்தில் இருந்து தற்காலம் வரையான நிகழ்வுகளின் வரலாறு ஆகும். பண்டைய உலகின் ஏனைய நாடுகளுடனான வணிகத்துக்கு சோமாலியா ஒரு மையமாக விளங்கியது.கட்டுக்கதைகளில் வரும் பன்ட் எனப்படும் பழங்கால நாட்டின் அமைவிடம் இதுவாக இருக்கக்கூடும் எனச் சிலர் கருதுகின்றனர்.மத்திய காலத்தில், அசூரான் சுல்தானகம், அடல் சுல்தானகம், வார்சங்காலி சுல்தானகம், கெல்டி சுல்தானகம், மசீர்த்தீன் சுல்தானகம் போன்ற பல வலிமை மிக்க பேரரசுகள் அப்பகுதியின் வணிகத்தில் ஆதிக்கம் செலுத்தின.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இந்த இராச்சியங்களுடன் செய்துகொள்ளப்பட்ட தொடர்ச்சியான பல உடன்படிக்கைகள் ஊடாகப் பிரித்தானியரும், இத்தாலியரும் சில கரையோரப் பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, பிரித்தானிய சோமாலிலாந்தையும், இத்தாலிய சோமாலிலாந்தையும் நிறுவினர். உட்பகுதியில், மொகம்மத் அப்துல்லா அசனின் டேர்விசு நாடு, பிரித்தானியப் பேரரசின் படையெடுப்புக்களை நான்கு தடவைகள் முறியடித்து அவர்களைக் கரையோரப் பகுதிக்குப் பின்வாங்கச் செய்தது. ஆனால், விமானப் படையின் துணையினால், 1920 இல் பிரித்தானியர் டேர்விசு அரசைத் தோற்கடித்தனர்.மசீர்த்தீன் சுல்தானகத்துக்கும், ஒப்யோ சுல்தானகத்துக்கும் எதிராகப் படையெடுத்து அவற்றைக் கைப்பற்றிய இத்தாலி, சோமாலியாவின் வடகிழக்கு, மத்திய, தெற்குப் பகுதிகளைத் தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.இந்த ஆக்கிரமிப்பு, அப்பகுதிகளில் 1941 ஆம் ஆண்டு பிரித்தானிய இராணுவ நிர்வாகம் கொண்டுவரப்படும் வரை நீடித்தது. வடமேற்கு சோமாலியா தொடர்ந்தும் ஒரு காப்பரசாக நீடித்திருக்க, வடகிழக்கு, மத்தி, தெற்கு சோமாலியப் பகுதிகள் ஒரு உடன்படிக்கையின் படி, 1950 ஏப்ரல் முதலாம் தேதி ஐக்கிய நாடுகள் நம்பிக்கைப் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. 10 ஆண்டுகளில் இப்பகுதிகளுக்குச் சுதந்திரம் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டிருந்தது. 1960 யூலை முதலாம் தேதி இரண்டு பகுதிகளும் ஒன்றிணைக்கப்பட்டு, சுதந்திர சோமாலிக் குடியரசாகக் குடிமக்கள் அரசாங்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. ஹாஜி பசீர் இசுமாயில் யூசூப்பின் தலைமையிலான சோமாலி தேசிய அவை இத்தாலிய சோமாலிலாந்தையும், பிரித்தானிய சோமாலிலாந்தையும் இணைத்து, சோமாலியக் குடியரசை நிறுவும் சட்டத்தை ஏற்றுக்கொண்டது.

ஒரு நாளுக்கு பத்தாயிரம் பேருக்கு இருபது, முப்பது சத வீத ஊட்ட சத்து குறைபாட்டுப் பிரச்சினைகளும், ஒருவருக்கு நாளொன்ருக்கு வெறுமனே 4 லீட்டர் தண்ணீர் மட்டுமே என அங்குள்ள பஞ்சத்தை விவரிக்க முடிகின்றது.

வறுமை இவர்களை கால காலமாக ஆட்சி செய்கின்றன.இது குறித்து ஐக்கிய நாடுகளின் மனிதநேய அமைப்பினர் கூறும்பொழுது , சோமலியாவில் 50 சதவீதம் மக்கள் பசி மற்றும் பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ளனர். சோமாலியாவின் 6 மண்டலங்ளில் பஞ்சம் பரவி, ஒரு நேர உணவு கூட கிடைக்காமல் ஆயிரக்கணக்கான மக்கள் தவித்து வருகின்றனர் என அவர்கள் ஒட்டு மொத்த வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்வதை உறுதிப்படுத்தியுள்ளது.


நாட்டின் வறுமை தாங்க முடியாமல் மக்கள் நாட்டை விட்டு வெளியேறும் இக்கட்டான நிலையில் இருக்கின்றனர். இவை ஒரு பக்கம் இருக்க பொருளாதாரப்பிரச்சினை தவிர்ந்த பல பிரச்சினைகளும் அங்கு தலை தூக்க ஆரம்பித்துள்ளது.

கடந்த நவம்பர் 26 சனிக்கிழமை தற்கொலை குண்டுதாக்குதல் சம்பவம் ஒன்று பதிவானது. இராணுவ பயிற்சி முகாம் அருகே தற்கொலை குண்டுதாரி ஒருவர் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்ததில் குறைந்தது ஐந்து பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 11 பேர் காயமடைந்துள்ளனர் என்று அரசு நடத்தும் ஞூழுயேயு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதல் குறித்து அரசு தரப்பில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

அல்-சபாப், ஒரு தசாப்தத்திற்கும் மேலாக சோமாலியாவில் போராடி வரும் அல்-கொய்தா-நேச ஆயுதக் குழு, நாட்டின் மத்திய அரசாங்கத்தை கவிழ்த்து, இஸ்லாமிய சட்டத்தின் கடுமையான விளக்கத்தின் அடிப்படையில் அதன் சொந்த ஆட்சியை நிறுவ முயல்கிறது. அதன் போராளிகள் 2011 இல் சோமாலிய தலைநகரில் இருந்து ஆப்பிரிக்க யூனியன் படையால் விரட்டியடிக்கப்பட்டனர். ஆனால் இன்னும் சோமாலியாவின் சில கிராமப்புறங்கள் அல்-சபாப் கட்டுப்படுத்துகிறது. இதை தொடர்ந்து மே மாதம் ஜனாதிபதி ஹசன் ஷேக் முகமது பதவியேற்றதிலிருந்து தாக்குதல்களை மேலும் வலுவாக்கும் முகமாக அல்-சபாபிறகு எதிராக "முழுமையான போருக்கு" பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பிட்ட ஐந்தாண்டுகளுக்குள் அங்கு நடத்தப்பட்ட மிகக் கொடூரமான தாக்குதலாக கல்வி அமைச்சைக் குறிவைத்து போராளிகள் இரட்டை கார் குண்டுத் தாக்குதல்களை நடத்தியதை குறிப்பிடலாம். மேலும் 2017 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் திகதி வெடிபொருட்கள் நிரம்பிய டிரக் ஒன்று வெடித்ததில் 512 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 290 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர், இது சோமாலியாவில் நடந்த மிக மோசமான தாக்குதலாகும்.

அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கு மிடையிலான சண்டையில் பாதிக்கப்படுவது பொதுமக்கள் தான் இதுவே இன்றைய சர்வதேசம்.




# பழமைவாதங்களை களைந்தெறியுமா கட்டார்?

மதத்தைப் பின்பற்றும் பழமை பேணும் பிராந்தியமாகவே மத்திய கிழக்கு நாடுகள் சில நூற்றாண்டுகளாக நோக்கப்பட்டன. மக்களால் தெரிவுசெய்யப்படாத மன்னராட்சி, பெண்களை முன்னுரிமைப்படுத்தாத பழமை பேணும் போக்கு, உண்ணல், மகிழல் மட்டும்தான் அரபுநாடுகளுக்கு அத்துப்படி. இப்படித்தான் இந்த மத்திய கிழக்கை மக்கள் நோக்கினர்.

இயற்கையின் அருட்கொடையான எண்ணெய் வளத்தை பயன்படுத்தத் தெரியாமல், மேலைத்தேயத்தின் மடியில் படுத்துறங்குவதாகவும் ஒரு காலத்தில் இந்நாடுகள் விமர்சிக்கப்பட்டன. வெளிநாடுகளிலிருந்து அதிகளவான தொழிலாளர்களை உள்ளீர்க்கும் மத்திய கிழக்கு, சுயமாக அறிவில் முன்னேறுவது எப்போது? முஸ்லிம் புத்திஜீவிகளிடம் மிக நீண்டகாலமாக இந்த ஆதங்கம் இருந்தது.

ஆயிரக்கணக்கான கியூபிக் லீற்றர் எண்ணெய்யைக் கொடுத்து பாஸ்மதி அரிசி மற்றும் உணவு வகைகளை இறக்குமதி செய்த காலமெல்லாம் இப்போது அங்கில்லை. இந்நிலைமைகள் படிப்படியாக நீங்கி வருகின்றன. தங்களிடமுள்ள இறைவனின் கொடையால்தான் உலகின் இலட்சக்கணக்கான மூலை முடுக்குகள் மற்றும் தெருக்களில் வாகனங்கள் ஓடுகின்றன. மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதில் விழிப்புற்று, சுய செயற்பாடுகள் மத்தியகிழக்கில் முடுக்கிவிடப்படுகின்றன. இதற்கு நல்லதொரு உதாரணம்தான் உலகக் கிண்ணத்துக்கான சர்வதேச உதைபந்தாட்ட போட்டிகள்.

இப்போட்டிகளை கட்டாரில் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதும் இந்த பழமை பேணுதல்களால்தான். தொழிலாளர்களை நடாத்தும் விதம், மனித உரிமை மீறல்கள்,

உஷ்ணமான காலநிலையைக் காரணங்காட்டியே, உலகக் கிண்ணப் போட்டியை கட்டாரில் நடாத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும், அங்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் உலகையே வியக்க வைத்துள்ளது.

ஒவ்வொன்றும் சுமார் அறுபதாயிரம் இருக்கைகளுள்ள நான்கு மைதானங்களில் 32 நாடுகள் மோதுகின்றன. உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை நடாத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்தவுடனே மைதானங்களை நிர்மாணித்துவிட்டது கட்டார். பார்வையாளர்கள், ரசிகர்கள், ஆதரவாளர்கள் அலையெனப் படையெடுப்பதால் அரபு மண்ணே அதிர்கிறது. அயல் நாடுகளில் உள்ள எல்லைகளைத் திறந்து அங்குள்ள ஹோட்டல்களிலும் தங்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எனினும், 24 மணி நேரமும் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் செயற்படுவதுடன், காவல் கண்காணிப்புக்கள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து நெருக்கடி, இட நெருக்கடிகளைக் குறைக்க அங்கு பணியாற்றும் வெளிநாட்டவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டு தாயகம் அனுப்பப்படுகின்றனர். வீதிகளில் தக்க காரணமின்றி பயணிக்கும் வாகனங்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. மேலதிகமாக 16,000 உணவகங்கள் திறக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு தகவல். பல தேசங்களிலிருந்தும் வந்துள்ளோர்களது விருப்பு, சுவை, தேவைகளையறிந்து உணவுகள் தயாரிப்பதற்கு சமையல் தயாரிப்பாளர்களும் தருவிக்கப்பட்டுள்ளனர். நவம்பர் 20இல் ஆரம்பமான இப்போட்டிகள் டிசம்பர் 18 இல் முடிவடையும் வரைக்கும் கட்டார் மண் களைகட்டும்.

தென்கொரியா மற்றும் ஜப்பானில் நடந்த போட்டிகளுக்குப் பின்னர் ஆசிய நாட்டில் நடைபெறும் போட்டி இது. அதுவும் அரபு நாடொன்றில் முதல்முறையாக நடைபெறுகிறது. இதனால், சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்தது மட்டுமன்றி, அரபுலகில் பல விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இஸ்லாமிய விரோத செயற்பாடுகளுக்கு கட்டார் இடமளித்துள்ளதாக அதிருப்தி தெரிவித்துள்ள அரபு லீக், நேச நாடுகளின் ஆலோசனையைப் பொருட்படுத்தாமல் கட்டார் தன்னிச்சையாக நடந்துள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளது.

இதனால் அச்சமடைந்த கட்டார் திடீரென விளையாட்டரங்குகளில் மதுபான விற்பனைக்கு திடீர் தடைவிதித்தது. இதுபோன்ற, இஸ்லாமிய கலாசாரத்துடன் நேரடியாக முரண்படும் களியாட்டங்களை தவிர்க்கவும் கட்டார் தயாராகிறது. இதைக் கடைப்பிடிப்பதைப் பொறுத்தே அரபு லீக்குடனான கட்டாரின் நெருக்கம் தீர்மானிக்கப்பட உள்ளது.

மேலும், ஈரானின் உளவாளிகள் உள் நுழைந்து (சுன்னி) அரபு நாடுகளின் அந்தரங்கங்களை அறிந்துகொள்ள இப்போட்டிகள் வழியேற்படுத்தும் எனவும் சில அரபு நாடுகள் அஞ்சுகின்றன. பொருளாதார ரீதியில் கொள்ளை இலாபமீட்டும் கட்டார், பாதுகாப்பு விடயத்தில் கோட்டைவிட்ட கதையாக இருந்துவிடக் கூடாது. இதுதான், அயலிலுள்ள அரபு நாடுகளின் கவலை. ஏனைய நாடுகளின் எல்லைகள் போக்குவரத்துக்காக திறந்துவிடப்பட்டுள்ளதால், சவூதி அரேபியாவுக்கு இது ஆபத்தாக அமையாமல் இருந்தால் சரிதான்.

இத்தனை சவால்களுக்கு மத்தியில் நடாத்தப்படும் போட்டிகளால் ஈட்டப்படும் அந்நியச்செலாவணியின் ஒரு பங்கையாவது, ஏழை நாடுகளுக்கு, அதிலும் விஷேடமாக ஆபிரிக்காவிலுள்ள வறிய முஸ்லிம் நாடுகளுக்கு வழங்க கட்டார் முன்வர வேண்டுமென சர்வதேச இஸ்லாமிய ஒத்துழைப்பு மாநாடு கோரியுள்ளது. இவ்வளவு ஆவலாக ஏற்பாடுகளைச் செய்த கட்டார், முதலாவது போட்டியில் ஈக்குவடோருடன் தோற்றமைதான் இரட்டிப்புக் கவலை.

சவூதி அரேபியாவோ முதலாவது போட்டியிலே ஆர்ஜண்டீனாவை தோற்கடித்தமை அரபுலகை ஆச்சர்யத்திலாழ்த்தியது. இதனால், முழுநாள் விடுமுறையும் அங்கு வழங்கப்பட்டது. இதுமட்டுமா ஆச்சர்யம்! சவூதி அரேபிய வீரர்கள் சகலருக்கும் அதி நவீன ஆடம்பரக் கார்கள் (ரால்ஸ் ரொய்ஸ்) அந்நாட்டு மன்னரால் அன்பளிக்கப்பட்டதே ஆச்சர்யம்.

# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நுவரெலியாவில் மாற்றுத்திறனாளிகள் தினம்





(செ.திவாகரன்)

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் இன்றைய தினம் நாடளாவிய ரீதியில் பல இடங்களில் அனுஸ்டிக்கப்பட்டுள்ளது . அந்த வகையில் உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நுவரெலியாவில் பல இளைஞர் கலகங்கள் இணைந்து விழிப்புணர் ஊர்வலம் நடைபெற்றது.

மாற்றுத்திறனாளி மாணவர்களை பாடசாலையில் சேர்ப்பதில் அவசியம் மற்றும் ஒதுக்கப்படுவது தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகள் ஏந்தி மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் குறித்து பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாணவர்கள் நுவரெலியாவில் பிரதான நகரில் முக்கிய வீதிகள் வழியாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

அத்துடன் நுவரெலியா பிரதான பேரூந்து நிலையத்திற்கு முன்பாக மாற்றுத்திறனாளிகளை “பாடசாலை சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்” என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு வீதி நாடகமும் நடைபெற்றது.

# மாவனல்லை கல்வி வலயத்தில் முதலிடம் பெற்ற தல்கஸ்பிடிய முஸ்லிம் மகா வித்யாலயம்

(எம். ஆர். எம். அமீன் )

அண்மையில் வெளிவந்த க.பொ.த (சா/ த) பரீட்சைப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது மாவனல்லைக் கல்வி வலயத்திலுள்ள அனைத்து தமிழ் மொழி மூல பாடசாலைகளிலும் முதலிடத்தை தல்கஸ்பிடிய முஸ்லிம் மகா வித்யாலயம் பெற்றுள்ளது.

தல்கஸ்பிடிய முஸ்லிம் மகா வித்யாலயத்தில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 89 மூ மாணவர்கள் உயர்தரம் கற்பதற்கு தகுதியைப் பெற்றுள்ளது.

மாவனல்லை கல்வி வலயத்திலுள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் சதவீதம் கீழே தரப்பட்டுள்ளது

( 1 ) தல்கஸ்பிடிய முஸ்லிம் மஹா வித்யாலயம் 89 %

( 2 ) .கொடேகொட முஸ்லிம் வித்யாலயம் 86 %

( 3 ) தெல்கஹகொட முஸ்லிம் வித்யாலயம் 79 %

( 4 )திப்பிடிய முஸ்லிம் மஹா வித்யாலயம் 78%

( 5 ) பதுரியா முஸ்லிம் மஹா வித்யாலயம் 78 %

( 6 ) தாருல் உலூம் முஸ்லிம் வித்யாலயம் 77 %

( 7 ) அல் அஸ்ஹர் முஸ்லிம் மஹா வித்யாலயம் 75 %

( 8 ) ஸாஹிரா தேசிய பாடசாலை 73 %

( 9 ) உடு/ஹருவ முஸ்லிம் வித்யாலயம் 60 %

( 10 ) நூரானியா முஸ்லிம் மஹா வித்யாலயம் 57 %

( 11 ) மடுல்போவ முஸ்லிம் வித்யாலயம் 54 %

( 12 ) தனாகம முஸ்லிம் வித்யாலயம் 40 %

( 13 ) மதீனா முஸ்லிம் வித்யாலயம் 38 %

( 14 ) அல் ஜெலால் முஸ்லிம் வித்யாலயம் 20 %

( 15 ) தும்புலுவாவ முஸ்லிம் வித்யாலயம் 0 %

*வாசகர்களே!*

இப்பத்திரிகை குறித்தான உங்களது நேர்த்தியான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றது.
உங்களது கருத்துக்கள் மற்றும் செய்திகளை கீழுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்கவும்.

editor@newsplus.lk

# எஸ்.ஏ. இஸ்மத் பாத்திமா, எச். பிதாவிற்கு தேசிய மட்டத்தில் கௌரவிப்பு!






முல்ல ஸாஹிரா முஸ்லிம் வித்தியாலய தரம் 04, மாணவி எச். பிதா கவிதை ஆக்கத்தை முன்வைத்து இரண்டாம் இடத்தைப் பெற்றமைக்காக அதிதிகளிடம் இருந்து தேசிய இலக்கிய விருது வழங்கலின் போது வெள்ளிப்பதக்கம், ஏழாயிரத்து ஐநூறு ரூபாய் பெறுமதியான காசோலை மற்றும் சான்றிதழ் என்பன வழங்கி கௌரவிக்கப்படுவதனை படத்தில் காணலாம்.

அருகில் தற்போதைய புத்தசாசன, மத மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சரும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ விதுர விக்கிரமநாயக்க அவர்களும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளருமான திருமதி தரணி அனோஜா கமகே அவர்களும் அருகில் இருப்பதைக் காணலாம்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிக்காட்டலுடன் பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலக மட்டத்தில் நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டித் தொடரில் வெற்றியாளர்களிடையே தேசிய மட்டத்தில் வெற்றிப்பெற்ற வெற்றியாளர்களுக்காக 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய இலக்கிய விருது வழங்கும் நிகழ்வு (17) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவ பிரதமர் தினேஷ் குணவர்தன அவர்களின் தலைமையில் கொழும்பு 07, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது.

இந்நிகழ்வில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த தேசிய இலக்கியப் போட்டிக்காக திறந்த சிறுவர் கதையாக்கப் போட்டியிப் பிரிவில்” பறக்கத் தெரியாத பறவைகள்” எனும் தலைப்பில் சிறுவர் கதை ஆக்கத்தை முன்வைத்து முதலாம் இடத்தைப் பெற்றமைக்காக பேராசிரியர் பிரனீத் அபேசுந்தர அவர்களது கரங்களால் பஸ்யால மே.மா/ மினு/ எல்லலமுல்ல ஸாஹிரா முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபரும் கவியரசியுமான செய்யது அஹமது இஸ்மத் பாத்திமா தேசிய இலக்கிய விருது வழங்கலின் போது தங்கப்பதக்கம், பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான காசோலை மற்றும் சான்றிதழ் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டது.

பஸ்யால மே.மா/ மினு/ எல்லல


அப்ரித் வஸீர்

உலகில் அதிகளவான மக்களால் பெரிதளவில் எதிர்பார்க்கப்படும் போட்டியாக இந்தியா பாகிஸ்தான் இடையிலான போட்டிகள் அமைந்துள்ளன. இவை கிரிக்கெட் ரசிகர்களுக்கு மத்தியில் திருவிழாவாக கொண்டாடப்படுகின்றன என்பதில் சந்தேகமில்லை. இரண்டு அணிகளும் பல ஆண்டுகளாக இருதரப்பு போட்டிகளில் மோதிக் கொள்வதில்லை. ஐசிசி உலகக்கோப்பை, சாம்பியன்ஸ் டிராபி மற்றும் ஆசியா கிண்ண தொடரில்களில் மாத்திரமே இரு அணிகளும் பொதுவாக மோதி வருகின்றது. கடந்த 2008 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் நடைபெற்ற ஆசியாக்கிண்ண தொடருக்கு இந்திய அணி சென்றிருந்தது. அதேபோல் பாகிஸ்தானும் கடைசியாக 2016ஆம் ஆண்டு டி20 உலகக் கிண்ண தொடருக்காக இந்தியா சென்றது. இதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் மோதலே பிரதான காரணமாக உள்ளது. கடந்த 2008 ஆம் ஆண்டு மும்பை பயங்கரவாத தாக்குதலுக்குப்பின் இந்திய அணி பாகிஸ்தானுக்கு சென்று விளையாடுவதில்லை என முடிவெடுத்தது. 14 வருடங்களாகியும் இன்று வரை அங்கு செல்லவில்லை.

எதிர்வரும் ஆண்டு 2023 இல் ஆசியாக் கிண்ண தொடர் பாகிஸ்தானிலும், உலகக்கோப்பை தொடர் இந்தியாவிலும் நடைபெற உள்ளன. இந்த இரண்டு தொடர்களிலும் முதலாவது ஆசிய கோப்பை தொடர் நடைபெற உள்ளதனால் இதில் இந்திய அணி பங்கேற்காது என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலாளர் ஜெய் ஷா தெரிவித்துள்ளார்.

இது ஒரு அதிர்ச்சித்தகவளாக இந்திய ஊடகங்கள் கூறினாலும் இது பழகிப்போன விடியமனெ முழு கிரிக்கெட் உலகும் அறிந்த விடயமாக உள்ளது. இந்த கருத்துக்கு பதில் கொடுக்கும் வகையில் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் தலைவர் ரமீஸ் ராஜா அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். அதாவது பாகிஸ்தானுக்கு வந்து விளையாட இந்திய அணி மறுத்தால் இந்தியாவில் நடைபெறும் உலகக் கோப்பை தொடரில் பாகிஸ்தான் அணியும் பங்கேற்காது என அதிரடி பதிலை கொடுத்துள்ளார் மேலும் பாகிஸ்தான் அணி தொடரில் பங்கேற்கவில்லை எனில் யார் தான் போட்டிகளை பார்க்கப் போகிறார்கள் எங்கள் அணி சிறப்பான முறையில் விளையாடி வருகிறது. பாகிஸ்தான் அணியின் பொருளாதாரத்தை முன்னேற்ற நாம் சிறப்பாக விளையாடினால் தான் முடியும். கடந்த காலத்தில் பாகிஸ்தான் அணி இந்திய அணியை இருமுறை வீழ்த்தியுள்ளது என பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் இவ்வாறு பதிலடி ஒன்றை வழங்கியிருந்தது. இதற்கு இந்திய கிரிக்கெட் வாரியத்தின் பதில் எவ்வாறு அமையும் என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.




# “நீங்கள் வராவிட்டால் நாங்களும் வர மாட்டோம்”

## - பிசிசிஐ யை தெறிக்க விட்ட ரமீஸ் ராஜா!





1992 முதல் உலக கோப்பையில் களமிறங்கிய அத்தனை போட்டிகளிலும் பாகிஸ்தானை தொடர்ச்சியாக இந்தியா தோற்கடித்தது. இருப்பினும் கடந்த வருடம் டுபாயில் நடைபெற்ற டி20 உலக கோப்பையில் விராட் கோலி தலைமையிலான இந்தியாவை தோற்கடித்த பாபர் அசாம் தலைமையிலான பாகிஸ்தான் வரலாற்றை மாற்றி எழுதி புதிய சரித்திரம் படைத்தது. அந்த நிலைமையில் சமீபத்தில் நடைபெற்ற ஆசிய கோப்பையில் அதே டுபாயில் லீக் சுற்றில் வென்றாலும் மீண்டும் சூப்பர் 4 சுற்றில் பாகிஸ்தானிடம் தோற்ற இந்தியா அரையிறுதிக்கு தகுதி பெற முடியாமல் வெளியேறியது. கடந்த மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற டி20 உலகக்கிண்ண தொடரில் ஆரம்பத்தில் வலுவான நிலையில் இருந்த இந்திய அணி அரையிறுதியில் இங்கிலாந்திடம் படுதோல்வியடைந்தது. ஆரம்பத்தில் தடுமாறிய பாகிஸ்தான் இறுதி ஆட்டங்களில் மிகச்சிறப்பாக ஆடி இறுதிப்போட்டி வரை தங்களுடைய நிலையை தக்க வைத்துக்கொண்டது.

இந்தியா - பாகிஸ்தான் நாடுகளிடையே எல்லை மோதல்கள், தீவிரவாதம் குறித்த பிரச்சனைகள், அரசியல் விவாதங்கள், அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடக்கும் போதெல்லாம் அவற்றின் விளைவு கிரிக்கெட்டில் எதிரொலிப்பது வழக்கமானது. இந்த இரண்டு நாடுகளின் அணிகளும் கிரிக்கெட் விளையாடும் போது மட்டும் தேசிய உணர்வு மிதமிஞ்சிப் பொங்கி வழிவதாகவும், நாடி நரம்புகளில் நாட்டுப்பற்று முறுக்கேறி, மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்பதாகவும் இந்திய ஊடகங்கள் சித்தரிப்பது புதிதல்ல. இந்த இரண்டு நாட்டு ரசிகர்களின் தேசிய உணர்வு பொங்குகிற போது, அது வகுப்புவாதமாகவே எஞ்சி நிற்கிறது என்பது ஏற்கெனவே பலமுறை நிரூபிக்கப்பட்ட ஓர் உண்மை. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல அரசியல் தலைவர்கள் இந்தியா - பாகிஸ்தான் விளையாடும் கிரிக்கெட் போட்டிகளுக்கு அதிகக் கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள்,வருகிறார்கள்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்குப் பின்னால் இந்திய முஸ்லீம்கள் ஒளிந்திருப்பது போன்ற தோற்றத்தை இந்துத்துவவாதிகளும் வகுப்புவாத ஊடகங்களும் கட்டமைக்கத் தவறியதில்லை. இந்தியன் என்ற வட்டத்தைத் தாண்டி ஒரு சாதாரண ரசிகன் என்ற மனநிலையில் அவுஸ்திரேலிய அணியைப் பாராட்டலாம் வெஸ்ட் இன்டீஸ் அணியைப் பாராட்டலாம். தப்பித் தவறி, பாகிஸ்தான் அணியை ஒருவர் வெளிப்படையாகப் பாராட்டிவிட முடியாது. அப்படிப் பாராட்டிவிட்டால், அவரை ஏதோ பயங்கரவாதியைப் பார்ப்பது போன்ற சூழல் இந்தியாவில் உருவாக்கப்பட்டுவிடும். பாகிஸ்தானுக்கு எதிராக நடக்கும் போட்டிகளில் சரியாக விளையாடாத வீரர் ஒரு தேசத் துரோகி, அதிக ரன்களைக் குவித்தவர் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர், அதிக விக்கெட்களை எடுத்தவர் மகாத்மாவின் வாரிசு என்ற கோணத்தில் மனோபாவங்கள் கட்டமைக்கப்படுகின்றன. பாகிஸ்தானுக்கு எதிரான ரன்களின் எண்ணிக்கையும் விக்கெட்டுகளின் எண்ணிக்கையும்தான் நாட்டுப் பற்றின் அளவுகோல் என்ற நம்பிக்கை பலமுறை விதைக்கப்பட்டுவிட்டது. கடந்த வருடம் டி20 உலகக்கிண்ண ஆட்டத்தில் இந்தியா அணி பாகிஸ்தானிடம் படுதோல்வியடைந்ததுக்கு முஹம்மத் ஷமியே காரணம் என இந்திய இரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வந்தனர்.

இந்த வரலாற்றின் தொடர்ச்சியாக, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் பாகிஸ்தான் - இந்தியா இடையிலான அரையிறுதி கிரிக்கெட் போட்டியைப் பார்க்க பாகிஸ்தான் பிரதமர் கிலானிக்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பு ‘நட்பை’ வளர்க்கவே என்று சொல்லப்பட்டது. கடந்த கால அனுபவங்களிலிருந்து பார்க்கும்போது, இதுபோன்ற ‘கிரிக்கெட் - அரசியல் - நட்பு முயற்சிகள்’ ஏற்படுத்திய விளைவு குறைந்த ஆயுளைக்கொண்டதாகவே இருந்திருக்கிறது. இந்த உறவு நீடிப்பதில்லை என்று டைம்ஸ் ஒஃப் இந்தியா நாளிதழ் குறிப்பிடுகிறது. அரசியல்வாதிகளின் கவனம் கிரிக்கெட்டில் விழுகிறபோது, ரசிகர்கள் இந்தப் போட்டியை தேசிய மானப் பிரச்சனையாகவே பார்ப்பது தவிர்க்க இயலாது. கிரிக்கெட் தவிர ஏனைய விளையாட்டு மைதானங்களில் இத்தகைய அரசியல் நாடகம் நடத்தப்படுவதில்லை. ‘உசுப்பேத்தி உசுப்பேத்தியே கிரிக்கெட் ரசிகர்களை ரணகளமாக்கும்’ செயல் பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. தங்கள் நாட்டு பிரதமர் விளையாட்டை பார்த்துக்கொண்டிருக்கிறார் என்ற எண்ணம், விளையாட்டு வீரர்களைவிட பார்த்துக்கொண்டிருக்கிற ரசிகர்களுக்கு வெறியை அதிகரிக்கவே செய்யும்.

இரு நாட்டுத் தலைவர்கள் பார்த்து ரசிக்கிற விளையாட்டுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் எப்படி இருந்தது என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. “வரலாறு காணாத பாதுகாப்பு” என்ற புளித்துப்போன சொற்றொடரை ஊடகங்கள் வழக்கம்போல பயன்படுத்தத் தவறவில்லை. பணியில் அமர்த்தப்பட்டிருந்த காவலர்களின் எண்ணிக்கை மட்டுமே 3,500 என்றால், மற்ற அம்சங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அப்படியானால், பாதுகாப்புக்காக மட்டும் எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கும் என்பதை நாமே கணித்துக் கொள்ளலாம். இந்த வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகளில் 2 விழுக்காட்டைப் பயன்படுத்தியிருந்தால்கூட, இலங்கை ராணுவத்தால் சுட்டுத்தள்ளப்படும் தமிழக மீனவர்களைக் காப்பாற்றியிருக்கலாம்.

போதாக் குறைக்கு கிரிக்கெட் மைதானம் என்பது போர்க்களமாகவே ஊடகங்களால் சித்தரிக்கப்படுகிறது. நடப்பது போட்டியா, போரா என்ற சந்தேகம் இயல்பாகவே வந்துவிடுகிறது. 1992ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்ற பாகிஸ்தான் அணியின் துணைத் தலைவர், ஜாவத் மியான்தத் இந்த ‘நட்பு’ முயற்சியை இப்படிக் குறிப்பிடுகிறார் “நடப்பது போர் அல்ல. விளையாட்டுப் போட்டிதான்”. எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பது போல் இருக்கிறது என்றார்.

இது முடிவிலி என்று கூறுவதில் ஐயமில்லை.


அப்ரித் வஸீர்



# 022காற்பந்து உலகக்கிண்ணம் நொக்கவுட் போட்டிகள் ஆரம்பம்!

கட்டாரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கால்பந்தாட்ட உலகக்கோப்பை போட்டிகள் இரண்டாம் கட்ட நகர்வை நோக்கி நேற்றைய தினம் (03) சென்றுள்ளது. விறுவிறுப்பான போட்டிகளாகவும் , கால்பந்தாட்ட ரசிகர்கள் தவிர்ந்த ஏனைய விளையாட்டு ரசிகர்களையும் திரும்பி பார்க்கும் அளவிற்கு இந்த போட்டிகள் பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளது. இதற்கு பிரதான காரணம் புது அணிகள் போட்டிகளில் வெல்லுவதும் , புத்துப்புது வீரர்கள் வரலாற்றில் தமது பெயர்களை பதிப்பதுமே இதற்கான பிரதான காரணமாக அமைந்துள்ளது.

நொக்கவுட் சுற்றில் 16 அணிகளுக்கிடையில் நடைபெறும் இப்போட்டிகளில் முறையே நெதர்லாந்து மற்றும் அமெரிக்க, அர்ஜண்டீனா மற்றும் அவுஸ்திரேலிய, பிரான்ஸ் மற்றும் போலாந்து, இங்கிலாந்து மற்றும் செனகல், ஜப்பான் மற்றும் குரோசியா ,பிரேசில் மற்றும் கொரியா, மொரோக்கோ மற்றும் ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் சுவிசர்லாந்து அணிகள் போட்டியிட இருக்கிறது. இப்போட்டிகளில் இருந்து முதல் கட்டமாக வெற்றி பெரும் எட்டு அணிகள் அடுத்த கட்டத்தை நோக்கி செல்லும். அதனைத்தொடர்ந்து எட்டு அணிகளில் நான்கு அணிகள் அரை இறுதிப்போட்டிகளுக்கும் அதில் வெற்றி பெரும் இரு அணிகள் இறுதிப்போட்டிகளுக்கு தகுதிபெறும்.

குழு சுற்றில் 32 அணிகள், ஒரு குழுவுக்கு 4 அணிகள் வீதம், 8 குழுக்களாக பிரிக்கப்பட்டன. இதில், குழுக்களில் முதலிரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள், காலிறுதிக்கு முந்தைய சுற்றான, நொக்கவுட் 16இல் மோதிக்கொள்ள தகுதிபெற்றன.

இந்நிலையில், குழு சுற்று போட்டிகள் வெள்ளிக்கிழமையுடன் (02) நிறைவுக்கு வந்தன. இதில், பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அணிகளான அர்ஜென்டீனா, ஜேர்மன், ஸ்பெயின், பிரான்ஸ், போர்த்துகல், பிரேசில் ஆகிய அணிகள் குரூப் சுற்றில் தலா 1 தோல்வியை சந்தித்துள்ளன. ஆனால், ஜேர்மனைத் தவிர மேல குறிப்பிட்ட ஏனைய அணிகள் அனைத்தும் அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளன.

குரூப் சுற்றில், எந்த ஒரு அணியும் மூன்று போட்டிகளிலும் வெற்றி பெறவில்லை. நெதர்லாந்து, இங்கிலாந்து அணிகள் மட்டும் இரண்டு போட்டிகளை வென்று, ஒரு போட்டியை சமநிலை செய்தது. அமெரிக்கா ஒரு போட்டியை வென்று இரண்டு போட்டிகளை சமநிலை செய்தது. இந்த மூன்று அணிகள் மட்டுமே குரூப் சுற்றுகளில் தோல்வியே காணாத அணிகளாகும்.

நொக்கவுட் சுற்றுக்கு தகுதிபெற்ற அணிகளாக,

நொக்கவுட் சுற்று 16 பலப்பரீட்சை அனைத்தும் இலங்கை நேரப்படி

நெதர்லாந்து எள அமெரிக்கா - நேற்று (3) இரவு 8.30 மணிக்கு

ஆர்ஜென்டினா எள அவுஸ்திரேலியா - இன்று (4) நள்ளிரவு 12.30 மணிக்கு

பிரான்ஸ் எள போலந்து - இன்று (4) இரவு 8.30 மணிக்கு

செனகல் எள இங்கிலாந்து - டிசம்பர் 5 நள்ளிரவு 12.30 மணிக்கு

ஜப்பான் எள குரோஷியா - டிசம்பர் 5 இரவு 8.30 மணிக்கு

தென் கொரியா எள பிரேசில் - டிசம்பர் 6 நள்ளிரவு 12.30 மணிக்கு

மொராக்கோ எள ஸ்பெயின் - டிசம்பர் 6 இரவு 8.30 மணிக்கு

போர்த்துகல் எள சுவிட்ஸர்லாந்து - டிசம்பர் 7 நள்ளிரவு 12.30 மணிக்கு நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதில் வெற்றி பெறும் அணிகள் காலிறுதி சுற்றுக்கு முன்னேறும். தோல்வி பெறும் அணிகள் நேரடியாக வெளியேறும்.இறுதிப்போட்டிகள் எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.